தேவாங்க புராணம்

(உரைநடை)

ஆசிரியர்

கோவைகிழார்

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம் இருபத்தைந்தாம் பட்டம் கயிலைப்புனிதர் முனைவர் திருப்பெருந்திரு குருமகாசன்னிதானங்களின் அருளாணையின் வண்ணம் திருவள்ளுவராண்டு 2053 சுபகிருது ஆண்டு கார்த்திகைத் திங்கள் 28ஆம் நாள் (14.12.2022) மகம் விண்மீன் அருள்திரு சாந்தலிங்கப் பெருமான் மாதக் குருவழிபாட்டு நிகழ்வில் திருமிகு. சி. ஆனந்தராசு அவர்களின் பொருளுதவியால் வெளியிடப்பெறுகின்றது

வெளியீடு

தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகம்

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி,
பேரூர், கோவை-10.

நூற் குறிப்பு

பதிப்புரிமை : தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகம்

நூலின் பெயர் : தேவாங்க புராணம் (உரைநடை)

ஆசிரியர் : கோவைகிழார்

தொகுப்பாளர் : செல்வி.செ. ரஞ்சிதா,
சு. விக்னேசு,
வி. அர்ஜுன்,
முனைவர் பட்ட ஆய்வாளர்.

நூல்வகை : புராணம் (உரைநடை)

ஆண்டு : 2022

விலை : ரூ.50/-

பதிப்பாசிரியர் : திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார்


உரிமை : நூலகத்திற்கு

வெளியீடு : தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகம்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை
அறிவியல் தமிழ்க்கல்லூரி
பேரூர், கோவை – 641010

அச்சாக்கம் : சௌமி அச்சகம்,
1 ஈ, துடியலூர் ரோடு, சரவணம்பட்டி,
கோவை – 641 035
9842252779.

உ

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க



திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்
பேரூராதீன குருமகாசந்நிதானம் கயிலைப் புனிதர்
முனைவர் ***திருப்பெருந்திரு சாந்தலிங்க***
மருதாசல அடிகளார்
பேரூராதீனம், பேரூர், கோவை

பதிப்புரை

இன்ப அன்பினீர்,

அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான் இன்னருள் பெருகுக. நமது ஆதீனக் கல்லூரியின் முதல் முதல்வராகப் பணியாற்றிய சிறப்புக்குரியவர் கோவைகிழார் அவர்கள். அவர் கவிதை, கட்டுரை, நாடகம், செய்யுள், கோயில் ஆய்வு, வரலாற்றுப்பதிவு, பயண இலக்கியம் எனப் பலதுறையிலும் பங்களிப்பைச் செய்தவர். அவற்றுள் தெலுங்கு, கன்னடம், வடமொழி ஆகிய மொழிகளில் இயற்றப்பட்ட தேவாங்க புராணத்தை அனைவரும் அறியும்படி எளிய தமிழில் உரைநடையாகச் செய்துள்ளார். தேவாங்கர் என்போர் நெசவைத் தம் தொழிலாகக் கொண்டு உலகினர்க்கு ஆடை வழங்கும் மரபினர்.

செய்யும் தொழிலெல்லாம் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை.

என்பது பழம்பாடல். அத்தகைய நெசவுத் தொழிலைச் செய்துவரும் மரபினரின் குலவரலாறு, குலதேவதை, குலச்சிறப்பு, சமயநெறி, தொழிற்சிறப்பு முதலியவற்றை விளக்குவதாகிய தேவாங்க புராண உரைநடை நூலானது நமது ஆதீனக் கல்லூரியின் தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகத்தால் அருள்திரு சாந்தலிங்கப் பெருமான் குருவழிபாட்டு நாளில் (*14.12.2022*) வெளியிடப்பெறுவது பாராட்டுக்குரியது. இந்த நூலுக்கு, கோவைகிழாரின்

இனத்தவரான **திருமிகு.சி. ஆனந்தராசு** அவர்கள் புரவலராக அமைந்திருப்பது பாராட்டுதலுக்குரியது. அவர்களுக்கு நம்முடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். கோவைகிழார் கையெழுத்துப் பிரதி உள்ளிட்ட பல அரிய நூல்களை வெளிக்கொணரும் முயற்சியில் ஆர்வம் கொண்டு செயல்பட்டுவரும் கல்லூரி நூலகர் முனைவர்.சா.அபிராமி அவர்களும், இந்நூலைக் கோவைகிழாரது கையெழுத்துப் பிரதியிலிருந்து தொகுத்த முனைவர் பட்ட ஆய்வாளர்கள் செல்வி.செ.ரஞ்சிதா, சு. விக்னேசு மற்றும் வி. அர்ஜுன் அவர்களும் நூல் வெளியீட்டில் முனைந்து செயல்பட்டு வரும் அன்பர்களும் நூலினை அச்சாக்கம் செய்து வழங்கிய சௌமி அச்சகத்தாரும் வாழ்வில் எல்லா நலங்களும் வளங்களும் பெற்று வாழ அருள்மிகு அம்பலவாணப் பெருமான் இன்னருளும் சாந்தலிங்கப் பெருமான் தண்ணருளும் கயிலைக்குருமணி இருபத்துநான்காம் குருமகாசன்னிதானங்களின் குருவருளும் துணைநிற்க வாழ்த்துகிறோம்.

வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள,

சாந்தலிங்க மருதாசல அடிகள்.

தேவாங்க புராணம்

எங்கள் குல தேவதை :

ஸ்ரீ சௌடாம்பிகையம்மன் நாங்கள் தொன்றுதொட்டு வழிபடும் குலதேவதை. எந்தக் காரியம் நாங்கள் செய்யத் தொடங்கின போதிலும் எங்கள் குல தேவதையாகிய சௌடாம்பிகையம்மனை வழிபட்டுவிட்டுத்தான் அக்காரியத்தைச் செய்வோம். அம்மனும் எங்கள் மீது கருணை கூர்ந்து எங்கள் காரியம் வெற்றிபெறும் வண்ணம் அருள்புரிவாள். எங்கள் குலத்தார் எங்கெங்கு குடியிருக்கிறார்களோ அங்கெல்லாம் அம்மனுக்கு ஒரு கோயில் கட்டிக்கொண்டு அனுதினமும் வழிபாடு நடத்துவார்கள். நித்திய வழிபாடு மட்டுமல்ல நைமித்திகங்களும், திருவிழா போன்ற விசேடங்களும் ஆண்டுதோறும் நடத்துவார்கள். சிறப்பாக அம்மனுக்கு நவராத்திரித் திருவிழா எங்கேயும் நடைபெறும். சில ஊர்களில் திருவாதிரை விழாவும் ஆவணி அவிட்ட விழாவும் நடத்துவார்கள்.

அந்தந்த ஊர்க் கோயில்களை அந்தந்த ஊர்க்குடிகள் பங்கு வீதம் தந்து கோயிலையும் திருவிழாவையும் நடத்துவார்கள். இவ்வாறு நடைபெறும் அம்மன் கோயில்கள் தமிழ்நாட்டில் எங்கள் தேவாங்கர்கள் குடியிருக்கும் எல்லா ஊர்களிலும் கட்டப் பெற்றிருப்பதோடு ஆந்திரம், கர்நாடகம், கேரளம், மகாராட்டிரம், கலிங்கம், வங்கம் முதலிய நாடுகளிலும் மிக உண்டு. அதாவது தெற்கே கன்னியாகுமரி முதல் வடமேற்கே பம்பாய் வரைக்கும் வடகிழக்கே காளிகட்டம் வரைக்கும் ஸ்ரீ சௌடாம்பிகையம்மன் கோயில்களைக் காணலாம். அங்கேயெல்லாம் அம்மன் பெயர் சௌடாம்பிகை என்றே வழங்குகிறது. ஆனால் மகாராட்டிர நாட்டில் மட்டும் வனசங்கரி என்றும் சகாம்பரி என்றும் பெயர் மாறி வழங்குகிறது. அந்த நாட்டில் குலதேவதையை மற்ற குலத்தார்களும் வழிபடுகிறார்கள். அதுபோலவே கர்நாடக

சாம்ராஜ்ஜியத்தில் இராயலு சீமையில் ஸ்ரீ சௌடேஸ்வரி அம்மனை பிராமணர் முதலான எல்லாக் குலத்தாரும் வழிபடுகிறார்கள். அப்படிப்பட்ட தலங்களில், அம்மன் கோயில்களும் தேவாங்க குலத்தார்களுக்கே அன்றி ஏனைய குலத்தார்களுக்கும் சேர்ந்தது. இந்த முறையில் சௌடாம்பிகை வழிபாடு நமது நாட்டில் நடைபெறுகிறது. மேலும் கல்வெட்டுகளில் கூறப்பட்ட சௌடேஸ்வரி கோயில்கள் அனந்தபூர் வட்டத்தில் குத்தி தாலுக்கா உப செல்லாவிலும் பாமிடியிலும் கர்நூல் வட்டத்தில் பண்டி ஆத்மகூரிலும் இருக்கின்றன.

திருப்பெயரின் பொருள் :

எங்கள் குல தேவதையின் திருப்பெயர் சௌடாம்பிகை என்று சொன்னோம். அதன் பொருள் தெரிய வேண்டாமா? சௌடாம்பிகை என்ற சொல் சூட + அம்பிகை என்ற இரண்டு சொற்கள் சேர்ந்த ஒரு பெயராகும். சூட என்றால் திருமுடி அல்லது கிரீடம் என்று பொருள். அம்பிகை என்றால் அம்மன், தாய், தேவி என்று பொருள். ஆகவே இப்பெயரினால் திருமுடி அல்லது கிரீடம் அணிந்த தேவி அல்லது எங்கள் அன்னை என்பது பொருள். எல்லா தேவிமார்களுக்கும் திருமுடி அல்லது கிரீடம் உண்டு அல்லவா. அப்படி இருக்க எங்கள் குல தேவதையாகிய அம்பிகைக்கு மட்டும் எவ்வாறு கிரீடம் அணி கொண்ட அன்னை என்ற பெயர் வந்தது கேட்கலாமல்லவா? அதற்கு ஒரு சிறந்த காரணம் உண்டு. கிரீடம் அணிவது பெருமைக்கு ஒரு சின்னம்.அதைவிட வெற்றிக்கு அது தகுந்த சின்னம். எங்கள் அன்னை எங்களுக்குப் பகைவர்களாக இருந்து வருத்தின அசுரர்களுடன் போர் புரிந்து அவர்களை வதைத்து எங்களைக் காப்பாற்றினார். அந்த வெற்றியின் காரியமாக ஒளி பொருந்திய கிரீடம் அணிந்து காட்சி தந்தாள். ஆகவே அவள் கிரீடம் தரித்த தேவியாகி சௌடாம்பிகை என்ற திருப்பெயர் பெற்றாள். அந்த திவ்ய செய்தியை வியந்தே நாங்கள் எங்கள் அன்னையை சௌடாம்பிகை என்று கூறுகிறோம். அதுமட்டுமல்ல ஐதீகப்படி, அம்மன்

வெற்றி பெறுவதற்காகவே கிரீடம் அணிந்து போருக்குச் சென்றதாக வரலாறு இருக்கிறது. எக்காலத்திலும் போருக்குச் செல்கிறவர்கள் வெற்றியை நினைத்து ஆடை ஆபரணங்களினால் அலங்கிருதம் செய்துகொண்டுதான் போருக்குச் செல்வது வழக்கமல்லவா. தற்போது மேல் நாட்டாரும் மிகவும் பகட்டான உடைகளையும் சின்னங்களையும் அணிந்து கொண்டு அல்லவா போருக்குச் செல்கிறார்கள். அம்மன் போருக்கு எழுந்தருளியபோது, கோடிசூரியப் பிரகாசம் பொருந்திய கிரீடத்தை அணிந்து கொண்டு போருக்குச் சென்றாளாம். அந்தக் கிரீடத்தின் தேஜசினால் அசுரர்களுடைய கண்கள் மழுங்கி நிலத்தில் சாய்ந்தார்களாம். அத்தகைய பிரகாசம் பொருந்திய கிரீடம் அல்லது திருமுடி அணிந்திருந்ததனால், அம்மனுக்கு சூடாம்பிகா அல்லது சௌடாம்பிகை என்று பெயர் வந்தது என்று எங்கள் ஐதீகம் கூறுகிறது.

பண்டைய ஐதீகம்:

இறைவன் ஆணையினால் படைப்புக் கடவுள் எல்லா உயிர்களையும் படைத்தபோது, அவ்உயிர்கள் ஆடையின்றி இருந்தார்கள். அறிவுபடைத்த மக்களும் தேவர்களும் கூட விலங்குகளைப் போல இருந்தார்கள். இச்செய்தியை திவ்விய முனிவர்(நாரதர்) இறைவனுக்கு விண்ணப்பிக்க, இறைவன் ஆடைகளை உண்டாக்குவதற்கு ஒரு அறிஞனைப் படைப்பதாகச் சங்கற்பம் கொண்டார். அப்போது ஒரு மகா அறிஞன் தோன்றி இறைவனை வணங்கினான். அவன் தான் தேவலன். அவனை இறைவன் விளித்து திருமாலிடம் சென்று நாபிக் கமலத்தில் உள்ள நூலைக் கேட்டு வாங்கி ஆடை உண்டாக்கும்படி ஆணையிட்டார். பிறகு இறைவியும் அத்தொழிலில் ஏதாவது தீங்கு உண்டானால் தான் பாதுகாப்பதாக அபயம் தந்தாள். தேவலன் திருமாலை வணங்கி நூலைப் பெற்றுக்கொண்டு ஒரு வனத்தில் பன்னசாலை கட்டி அதில் தங்கி வேலையில் ஈடுபட்டார். அப்போது தீமையே கருத்தாக இருந்த அசுரர்கள் இந்தத்

தொழிலைச் செய்யவொட்டாது தடைசெய்ய வந்தார்கள். வஞ்சகமாக தவத்தோர் போல வடிவம் எடுத்து வந்து, தேவலனை மயக்கி நூலைத் திருடிக்கொண்டுபோக எத்தனித்தார்கள். அதனைக் கண்ட தேவலன் அவர்களோடு போர்புரிய, அவர்கள் வலியை மீறிப் போர் புரிந்தார்கள். தேவலனும் இறைவியின் வாக்கை நினைத்து இறைவியைத் துதிக்க இறைவி கோடி சூரியப் பிரகாசத்துடன் கூடிய கிரீடம் அணிந்து சிங்க வாகனத்தில் எழுந்தருளி அசுரர்களை வதைத்து வெற்றியுடன் திகழ்ந்தாள். தேவலன் அத்தேவியையே தன் குல தேவதையாகக் கொண்டு அவளுடைய கருணாகடாட்சத்தினால் நூலை இரத்தத்தில் தோய்த்து பல வர்ணங்களாக்கி துணிகள் செய்து, அதனை தேவர் மக்கள் முதலியவர்களுக்குத் தந்து அவர்களுடைய நன்றிக்குப் பாத்திரன் ஆனான். இதுதான் பண்டைய புராண ஐதீகம்.

தேவலன் சௌடாம்பிகையையே குலதெய்வமாகக் கொண்டு கோயில்கட்டி வழிபாடு செய்து, பல விதமான ஆடைகளை உண்டாக்கி உலகில் உள்ள எல்லா அறிவு நிகழ்ந்த உயிர்களுக்கும் உதவி புரிந்து வந்த வகையில், அந்த தேவலனுக்கு ஆமோத நகரத்தில் அரசு செய்யும் பெருமை தரப்பட்டது. அவனுடைய வழித்தோன்றல்கள் நெசவுத் தொழிலையே தங்கள் தொழிலாகக் கொண்டு சௌடாம்பிகையையெ தங்கள் குலதெய்வமாகக் கொண்டு வாழ்ந்துவந்தார்கள். தேவலனுடைய சந்ததியர்கள் 10000 கோத்திரங்களாகப் பிரிந்து பெருகினார்கள். பாரதக் கண்டத்தில் பல இடங்களிலும் குடியேறி தொழில் செய்து மானுட வர்க்கம் முழுமைக்கும் ஆடை தானம் புரிந்து மிகப் பெருமையுடன் வாழ்ந்தார்கள். தேவலன் நீண்ட காலம் அரசு புரிந்து இயற்கை அடைந்தான். பிறகு அவன் வித்தியாதரன், சித்திரயோகி, சாதுகன், புட்பதந்தன், வேதாளம், வரருசி, தேவதாசன் என்ற ஏழு அவதாரங்கள் எடுத்து உலக மக்களைப் பாதுகாத்த பிறகு குலத்தை விருத்தியாக்கி மிகப் பெருமையோடு சிவபதம் அடைந்தான் என்பது ஐதீகம். இந்த வரலாறு வடமொழி

தேவாங்க மான்மியமான பிரம்மாண்ட புராணத்தில் ஒரு பகுதியாக இருக்கிறது. வடமொழி நூலும் அதன் மொழிபெயர்ப்பாக கன்னடம், ஆங்கிலம், தமிழ் முதலான மொழிகளிலும் நூல்கள் வெளிவந்துள்ளன. தமிழில் மாம்பழக் கவிராயர் செய்யுள்களாகப் பாடியுள்ளார். அதனைப் படித்து விவரமாகத் தெரிந்து கொள்ளலாம்.

ஐதீகத்தின் பொருள்:

மக்களுக்கு இன்றியமையாத தேவைகள் மூன்றில் உடை என்பது ஒன்று. உடை உண்டாக்குதல் அல்லது ஆடை நெய்தல் என்பது எங்கள் குலத்தாரின் பண்டைய தொழில். நல்ல காலம், கெட்ட காலம் எது வந்தாலும் எங்களில் பெரும்பான்மையோர் இத்தொழிலைவிடாமல் காத்து வருகிறார்கள். ஏனெனில்,

செய்யும் தொழில் எல்லாம் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யும் தொழிலுக்கு நிகர்இல்லை.

என்ற வெண்பாப் பகுதி எங்கள் போக்கை ஆதரிக்கின்றது. இத்தொழிலில் புனிதமும் சேவையும் இருப்பதறிந்தே உலகக் கவிஞர் திருவள்ளுவர் அதை ஏற்றுக் கொண்டார். அந்தச் சீரிய தொழிலிலும் அடிக்கடி குற்றம் குறைகளும், தீமைகளும் எதிர்ப்புகளும் வருகின்றன போலும். தற்காலத்து அரசியல் போக்கில் நெசவுத்தொழிலுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களும் தீங்குகளும் எண்ணித் தொலையா. இந்தக் குறைகள் ஆதிகாலத்திலும் இருந்தன போலும். அத்தீங்கினைத் தான் அம்மனுடைய ஐதீகமும் விளக்குகிறது. நெசவாளி நூல் பெற்று நெய்வதற்காக முயலுகின்றான். நூலைப் பக்குவப்படுத்துதல், பிணைத்தல், பாகு செய்தல், கஞ்சி தடவல், தறியில் போடுதல், நெய்தல், மடித்தல், விற்பனை செய்தல் முதலிய பல வேலைகள் உண்டு. இவைகளுக்கு ஏற்ற கருவி சாதனங்கள் உண்டு. இவைகளை ஒழுங்காகச் செய்தால்தான் துணிக்கு மதிப்பும் விளையும். அதனால், கூலியும் கூழும் கிடைக்கும். இவைகளுக்குத்

தடையாக நேரிடுவது சோம்பல், வறுமை,அறியாமை, ஊக்கமின்மை முதலிய தீய பண்புகள். இவைகளைப் போக்குவதற்கு சுறுசுறுப்பு, பொறுமை, அறிவு, ஊக்கம் முதலிய நற்குணங்கள் வேண்டும். அவைகளை அருளுவதற்கு அன்பின் ஆதரவு வேண்டும். இவைகள் இருந்தால் தான் நெய்பவன் உலகில் செல்வாக்கோடு பிழைப்பான். தேவலன் ஆடை உண்டாக்கத் தொடங்கியபோது அவனை அசுரர்கள் வஞ்சித்து, அவனுடைய நூலை அபகரிக்க முயன்றார்கள். அந்த வஞ்சகர்கள் தான் சோம்பல், அறியாமை முதலிய கெட்ட குணங்கள். தேவலன் அந்த அசுரர்களோடு போராடி வெற்றி பெற அம்மனைத் துதித்து அவள் ஆதரவு பெற்றான். அவனுக்கு உதவியாக இருந்த நல்ல ஆயுதங்கள், சுறுசுறுப்பு, பொறுமை, அறிவு முதலியவைகள். அவனுக்கு உதவியாக வந்த அன்னை அன்பின் உருவம், அதுவே ஆற்றல் அல்லது சிவசக்தி ஆகும். அச்சக்தியின் ஆற்றலாய் ஒளிபெற்று நின்றது, அம்மனுடைய ஒளிபொருந்திய கிரீடமாகும். ஆகவே, அம்மன் கோடிசூரியப் பிரகாசம் பொருந்திய கிரீடம் பதித்த அன்னையாக உருவகப்படுத்தி வழிபடப்பட்டாள். ஆற்றலின் பெருமை தற்காலத்து விஞ்ஞானிகளால் போற்றப்படுகிறது. அதையே அம்மனின் தத்துவப் பொருளாகப் புராணம் வருணிக்கிறது. இந்தப் பொருளை நாம் உணர்ந்தால் அன்னையின் ஒப்பற்ற பெருமையை நாம் அறியலாம். அந்த நிலையைத் தான் நாம் புகழ்ந்து கோயில் எழுந்தருளச் செய்து போற்றி வருகின்றோம்.

தேவாங்கர் குலம்:

மக்களுக்கு இன்றியமையாத தேவைகள் மூன்று அவைகள் உணவு, உடை, உறையுள் என்பன. உணவு உடலைப் போற்றுவதற்கும், உடை அதனைக் காப்பதற்கும். உறையுள் வசிப்பதற்கும் உதவுகின்றன. இம்மூன்றும் இல்லாவிடில் மனிதன் பிழைக்க முடியாது. ஆகவே, மனிதன் இம்மூன்றையும் பெறுவதற்காக உழைக்கின்றான். அவ்வாறு

உழைப்பதில் பங்கு வீதமாக வேலை செய்ய முயல்கின்றான். உணவுப் பொருளைப் பெருக்குகிறவன் உழவன், உடைகளை ஆக்குகிறவன் நெய்பவன், உறையுள் கட்டுகிறவன் கட்டிட வேலைக்காரன் இம்மூன்று தொழிலாளியும் மக்களில் இன்றியமையாதவர்கள். நாகரிகம் முதிர நெய்பவர்களுடைய தொழிலும் முக்கியமாகின்றது. உணவுக்கு அடுத்தபடியாக உடை வேண்டி இருக்கிறது. ஆகவே, எந்த நாட்டிலும் நெய்யும் தொழில் ஒரு சிறந்த தொழிலாகவே இருக்கின்றது. உலகம் முழுவதிலும் நெசவுத்தொழில் கொண்ட குடும்பங்கள் மிக உண்டு. நமது பாரத கண்டத்தில் ஏனைய தொழில் வகுப்பாளர்களைப் போல் நெசவுத் தொழில் வகுப்பாளர்களும் உண்டு. வடமலை முதற்கொண்டு குமரிமுனை மட்டும் கணக்கற்ற நாடுகளிலும் எண்ணற்ற வகுப்பாளர்கள் உண்டு. மொழியைப் பொறுத்தும் ஆசாரங்களைப் பொறுத்தும் பல வகுப்புகள் தோன்றி இருக்கின்றன. விந்திய மலைக்குத் தெற்கே தக்ஷிண இந்தியாவில் பல வகுப்புகள் இருக்கின்றன. அவர்களில் தேவாங்கர் பத்மசாலியர், சௌராஷ்டிரர், சேனியர், செங்குந்தர் முதலிய வகுப்பார்கள் எல்லாம் நெசவுத் தொழிலையே தொழிலாகக் கொண்டுள்ளவர்கள். இவர்களில் பதுமசாலியர் தெலுங்கும், சௌராஷ்டிரர்கள் சௌராஷ்டிரா மொழியும், சேனையர் கன்னடமும், செங்குந்தர் தமிழும் பேசுகிறார்கள். தேவாங்கர்களோ தெலுங்கு, கன்னடம், மராட்டியம் முதலிய மொழிகளையும் பேசுகிறார்கள்.

தேவாங்கர்கள் மூன்று மொழிகளைப் பேசிய பொழுதிலும் தொழில் குலஆசாரம், சமயாசாரம் முதலியவைகள் எல்லாம் ஒன்றே. வெவ்வேறு நாடுகளில் வசித்தபடியால் வெவ்வேறு மொழிகளைப் பேசத் தொடங்கினார்கள். சமய ஆசாரங்களும் அடுத்து சம்பிரதாயங்களும் அனேகமாக ஒற்றுமைப்பட்டு இருக்கும். எந்த மொழி பேசினாலும் சமயக் கட்டுப்பாட்டில் ஈடுபட்டிருப்பார்கள். மொழிபேதம் இருந்தும் ஒருமைப்பாடு ஏற்படுவதற்கு ஒரு சிறந்த காரணம் என்னவென்றால்,

அச்சமூகத்தார் வழிபடும் தேவதை ஒன்றாக இருப்பதாகும். தக்ஷிண இந்தியா முழுவதும் எந்தப் பகுதி எடுத்தாலும் தேவாங்கர்களைக் காணலாம். அவர்கள் எல்லோரும் சௌடாம்பிகையாகிய ஒரே தேவதையைத் தங்கள் குலதேவதையாகக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு தலைசிறந்த காரணமாக இருக்கின்றது. தேவாங்கர்கள் எல்லோரும் பொதுவாக கடவுள் கொள்கை கொண்டவர்கள். அவ்வாறு தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டு இருப்பதினால் அவர்களுடைய குல ஆசாரமும் மாறுபாடு அடையாமல் நிலைத்திருக்கின்றது. அவர்கள் தங்கள் தொழிலையும் விடாமல் பாதுகாத்து வருவதனால்அவர்களில் ஒருமைப்பாடு மிக உண்டு. இந்தக் குணங்களோடு தேவாங்க சமூகம் தொன்றுதொட்டு நிலை பெற்றிருக்கின்றது.

குலப்பெயர்:

தக்ஷிண இந்தியா முழுவதிலும் தேவாங்கர் என்ற பெயரே குலப்பெயராக வழங்கி வருகின்றது. இந்தப் பெயருக்குப் பல காரணங்கள் கூறுவது உண்டு தேவாங்கன் என்ற சொல் தேவ + அங்க என்ற இரண்டு சிறு சொற்கள் சேர்ந்த ஒரு பெயராகும். அவற்றில் தேவ என்றால் அமரர் என்ற பொருள். அங்க என்றால் உறுப்பு என்ற பொருள். இந்த இரண்டையும் சேர்த்தினால் அமரர் உறுப்பு என்று பொருளாகும். இதற்கு இரு விதமான வரலாறுகள் கூறுவர். ஒன்று தேவாங்கர்களின் ஆதி புருஷனான தேவல முனிவர் மகாதேவனுடைய சங்கற்பத்தினால் அவனுடைய உறுப்பிலிருந்து தோன்றினவன் என்பது, மற்றொன்று என்னவெனில் ஆதியில் தேவர்களும் ஆடையின்றி இருந்தார்கள் என்றும் அவர்களுக்குத் தேவலன் ஆடை உண்டாக்கி உடுப்பித்தனன் என்றும் அதன்படி அவன் தேவர்களுடைய அங்கங்களுக்கு உடை அளித்த காரணத்தினால் தேவாங்கன் என்ற பெயர் வந்தது என்றும் கூறுவார்கள். இவ்விரண்டு காரணங்களும் வரலாறுகளேயன்றி வேறு சான்றுகளைக் கொண்டவை அல்ல. பண்டைய காலத்தில் எந்தப் பொருள் பற்றி இப்பெயர்

ஏற்பட்டதோ அறிய முடியாது. காரணம் இல்லாமல் இடுகுறிப் பெயராக ஏற்பட்டதோ என்றும் கூற வகை இல்லை. மற்றொரு காரணமும் கூறலாம். தேவ என்ற வடமொழிச் சொல்லுக்கு ஒளி பொருந்தியவன் என்ற பொருள் உண்டு. அங்கம் என்றால் உறுப்பு அல்லது கூறு என்பது பொருள். ஆகவே, தேவாங்க மென்றால் ஒளி பொருந்திய கூறு அல்லது பங்கு என்று பொருளாகும். நெய்யும் தொழிலாளர் பல வகுப்பாளர்களிலும் ஒளிபொருந்திய பங்கு பெற்றிருந்த வகையில் இவ்வகுப்பாளர்களுக்குத் தேவாங்கர் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். அவர்கள் வழிபடும் தேவதையின் பெயரிலும் ஒளி பொருந்திய திருமுடி அணிந்தவள் என்ற பொருள் இருப்பதினால் தேவாங்கம் என்ற பெயருக்கும் ஒளியைப் பற்றிய பொருளே இருக்கலாம் அல்லவா?.

இனி தேவாங்கர்களின் உட்பிரிவுகள் பல உண்டு. தெலுங்கு, கன்னடம், மராட்டி பேசும் என மொழிகளைப் பின்பற்றி வேறு பெயர்கள் இல்லை. பண்டைய காலத்தில் மொழிகளைப் பின்பற்றிய பிரிவினை இல்லை. கொடுக்கல், வாங்கல் முதலிய ரத்த சம்பந்தம் இருந்தது. ஆனால், நடுக்காலத்தில் நின்றுவிட்டது. சமயப் பிரிவினை குறித்து சம்பிரதாய பேதம் சிறிது உண்டு. இது சின்னங்கள் அணிவதில் மாத்திரம் தெரிகின்றது. எல்லோருக்கும் பூணூல் தரிக்கும் உரிமை இருந்ததாலும் சில சிவாச்சாரியார் குடும்பங்கள் மட்டுமே ஆண் பிள்ளைகள் லிங்கம் கட்டிக் கொள்ளுவார்கள். பெரும்பான்மையானபேர் சைவர்களாக இருந்த போதிலும் சில குடும்பங்கள் மட்டுமே வைஷ்ணவர்கள் ஆகி திருநாமம் தரித்துக் கொள்வார்கள். கன்னடிய மொழியாளர்களில் வைஷ்ணவ சம்பிரதாயம் அதிகம். வீரசைவம், சைவம், வைஷ்ணவம் என்ற பிரிவுகள் இருந்த போதிலும் ஒரே மொழியாக மொழியாளராக இருந்ததால் திருமண விலக்கு இல்லை. இந்த வகையில் தான் சில வேறுபாடுகள் காணப்படும். மேலும் தேவாங்க குளத்தில் இரண்டு தாழ்ந்த பிரிவுகள் உண்டு. தேவாங்க குலத்தார்களுக்கு குல வேலையாக இருந்து, கலியாணம், சாவு

இல்லங்களில் மக்களை அழைத்தல், குழலூதுதல் முதலிய பணிவிடைகளைச் செய்யும் சில குடிகளுக்கு சிங்கம் என்று பெயர். அவர்கள் அச்சு கட்டும் தொழிலில் ஈடுபடுவார்கள். அவர்களுக்கு ஒரு குறித்த ஊதியம் உண்டு. இவர்கள் அம்மையின் வாகனமாகிய சிங்கத்தின் காதிடம் ஒளிந்து கொண்டு சரணடைந்து காப்பாற்றப்பட்டவர்கள் என ஐதீகம் உண்டு. சில குலக் கோயில்களில் பணிவிடை செய்வதற்காக பதிஇலராகச் சில குடும்பங்கள் விடப்பட்டனர். அவர்களில் பெண்கள் கோயிலுக்கு பொட்டுக்கட்டி விட்ட வகையில் மாணிக்கம் அல்லது பங்காரு எனப் பெயர் பெற்றனர். இப்போது இந்த வழக்கம் நின்று விட்டது. இந்த இரண்டு குடிகளும் தாழ்ந்தோராக எண்ணப்பட்டு மற்றவர்களுடன் கலவாத நிலையில் இருக்கிறார்கள். குலத்தாரை அண்டிப் பிழைப்பதன்றி இவர்களுக்கு வேறு குல உரிமைகள் இல்லை.

குல ஆசாரம்:

குல சம்பிரதாயங்கள் சிற்சில இடங்களில் சிறிது மாறுபாடு இருந்த போதிலும், பொதுவாகச் சில சம்பிரதாயங்கள் எங்கும் உண்டு. குல விஷயங்களில் பரிபாலனம் செய்வதற்காக பரம்பரை பரம்பரையாகச் சில உரிமைக்காரர்கள் உண்டு. குல விஷேசங்களில் முதல் தாம்பூலமும் அந்த வரிசைக் கிரமத்திலேயே கொடுக்கப்படும்.

1. பட்டக்காரன்
2. நாட்டு எஜமானன்
3. செட்டிமைக்காரன்
4. எஜமானன்
5. குடிகள்

திருவிழா, கல்யாணம், குல குற்ற விசாரணை இவைகளில் இந்த வரிசையில் தான் மரியாதை நடைபெறும்.

குலச் சடங்குகள் ஆகிய திருமணம், ஈமச்சடங்கு முதலியவற்றை நலம் போல நடத்துவதற்கு ஒவ்வொரு

ஊரிலும் குரு அல்லது புரோகிதர்கள், ஐயர்கள் என்ற சமயப் பெரியோர்கள் இருப்பார்கள். இவர்கள் எல்லாம் குலத்தவர்களே. சில தெலுங்கர்களில் மட்டும் பிராமண புரோகிதர்களை வைத்திருப்பார்கள். அந்த வழக்கம் இப்போது மறைந்து வருகிறது. குரு திருமணம், ஈமச்சடங்கு, திதி முதலியவைகளை நடத்துவார். ஐயர்கள் விசேஷக் காலங்களில் சமாராதனைகளுக்கு அழைக்கப்படுவார்கள். அவர்களில் தளவாய், உதாசு, கொரடர், காறுமாறு, சிரந்தி என்ற ஐந்து பிரிவுகள் உண்டு. தளவாயும், உதாசும் கர்ணகுண்டலம், நாகப்படலம், பாதகுரடு, அணிவார்கள். ஏனையோர் செருப்பு மட்டுமே அணிவார்கள். தவிர கூட்டங்களிலே தாம்பூலம் முதலியவைகளை வழங்குவதற்கு சேஷராஜு என்ற குலசேவகர் உண்டு. அவர் குலத்தவரே ஆவார்.

இனி குலத்துப் பெருமக்கள் கோத்திரங்களாகப் பிரிந்தார்கள் என்பது ஐதீகம். சகோத்திரர்கள், தாயாதிகள் ஆனதினால் திருமணம் கூடாது. மற்றொரு கோத்திரத்தில் தான் மணக்க வேண்டும். கோத்திரப் பெயர்களும் வீட்டுப் பெயர்களும் தனித்தனி உண்டு. கோத்திரங்களுக்கு மூல புருசன் ஒரு ரிசியாக இருப்பார். இதனை விரிவாகப் பின்னால் கூறுவோம்.

சமய ஆசாரம்:

தேவாங்க குலத்தாரின் சமய பரிபாலனத்தைக் குறித்து சில திட்டங்கள் ஆதி முதற்கொண்டு அமைந்திருக்கின்றன. அவைகளின் படி சிம்மாசனங்கள், குருபீடங்கள், மடங்கள் முதலியன ஏற்பட்டு இருக்கின்றன. சிம்மாசனாதிபதிகள் அந்தந்த ஊர்களுக்கு பட்டங்களும் செட்டிமைகளும் வழங்குவார்கள். தற்காலங்களில் ஆங்காங்கே வாரிசு இல்லாமல் போனதால் குலக்கூட்டங்கள் கூட்டி அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். குருபீடங்களில் இருந்து பற்பல ஊர்களுக்குப் புரோகிதர்களை நியமனம் செய்கிறார்கள். இந்த முறையில் சமய ஆசாரங்கள் நடைபெறுகின்றன. மடத்துக் குருக்கள் இளைஞர்களுக்குத்

தீட்சை கொடுப்பதும் யக்ஞோபனிதம் அணிவித்து உபதேசம் செய்வதும் உண்டு. இவ்வாறு ஏற்பட்ட நிலையங்களில் சிம்மாசனங்கள் நான்கு உண்டு.

1. சதரி
2. முதுநூரு
3. பெறுகொண்ட
4. படவேடு

என்பன கொங்குநாட்டு தாராபுரத்தைச் சேர்த்து ஐந்து என்று கொள்வாரும் உண்டு. இவைகளிலே சதரி என்பது காசிக்கருகிலும் முதுநூரு கோதாவரிக்கு அருகிலும், பெறுகொண்ட அனந்தபூர் வட்டத்திலும், படவேடு வட ஆற்காடு வட்டத்திலும் இருக்கின்றன. இவைகளிலே எல்லா சிம்மாசனப் பீடங்களும் இப்போது அழிந்து விட்டன. இனி குருபீடங்கள் ஐந்து இருந்தன

1. காசி
2. ஸ்ரீ சைலம்
3. சம்பு சைலம்
4. ஹேம கூடம்
5. சோணாசலம்

இவைகள் தற்போது பலவீனமடைந்து பல ஊர்களுக்கு அதன் உரிமையாளர்கள் சென்று விட்டனர். காசி உத்தரப் பிரதேசத்திலும், ஸ்ரீ சைலம் கர்னூல் வட்டத்திலும், ஹேமகூடம் ஹம்பியிலும், சோணாசலம் திருவண்ணாமலையிலும், சம்பு சைலம் கொள்ளேகாலத்திலும் இருந்தன. காசியில் இருந்த பீடம் இருக்கும் இடம் தெரியவில்லை. ஸ்ரீ சைலத்தில் குரு பீடங்கள் சிறிதளவில் இருக்கின்றது. அங்கே சிவராத்திரியின் போது குலத்தார்கள் கோபுரங்களில் ஆடைகளை இணைத்து கொடி கட்டுவது இன்றைக்கும் உண்டு. ஹேம கூடத்தில் பம்பாபதி விருபாக்ஷர் கோயிலுக்குத் தெற்கே உள்ள குன்றின் மேல் மண்டபம் இருக்கிறது. அதில் ஒரே ஆள் இருக்கின்றார்.

குரு சந்ததியார் தற்போது கோசப்பேட்டையில் இருக்கிறார்கள். சோணாசலத்தில் மடம் அழிந்து நண்ணுபுரத்தில் மட்டும் குடிகளும் ஒரு ஆசாரியாரும் இருக்கின்றார்கள். சம்பு சைலத்தில் குருபீடம் அதே அளவில் இருக்கின்றது. இனி குருமார்களின் பெயர்கள் முறையே தேவலர், மருளர், பண்டிதர், ககனர் என்று அழைக்கப்படுகிறார்கள். குருபீடங்களில் குருமார்களின் பெயர்கள் காசி மகாருத்ரய்யர், ஹேமகூடம்- முத்சங்கையர், சோணாசலம் - இராமலிங்கையர், சம்பு சைலம் - சாம்பலிங்கர் என்பர். இனி படவேட்டிற்கு 26 ஸ்தலங்களும், தாராபுரத்திற்கு 24 நாடுகளும், அவற்றிற்குச் சேனாதிபதிகளும் உண்டு.

அம்மன் ஆராதனை:

அம்மனைக் குலதேவதையாகக் கொண்டிருக்கும் மற்ற குலத்தார்களுக்கும் தேவாங்கர்களுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. அங்காளம்மன், மாகாளியம்மன், காமாட்சி அம்மன் முதலிய சக்தி தேவிகளைக் குல தேவதைகளாகக் கொண்டு வழிபடும் குலத்தார்கள் அத்தேவதை ஒன்றையே ஆலயத்திலும் திருவிழாவிலும் எழுந்தருளச் செய்வார்கள். ஆனால், தேவாங்க குலத்தார்களோ அம்மனோடு சாமியையும் திருவிழாக்களில் எழுந்தருளப் பண்ணுவார்கள். அப்போது சுவாமியை இடப வாகனத்திலும், அம்மனைச் சிங்க வாகனத்திலும் எழுந்தருளப் பண்ணுவார்கள். முன்கூறிய படி தேவாங்க குலத்தார்கள் விஜயதசமி, ஆவணி அவிட்டம் முதலிய விழாக்களை நடத்துவதன்றி சிறப்பாக அம்மன் பண்டிகை என்பதும் நடத்துவதுண்டு.

இப்பண்டிகை ஏதாவது ஒரு குறிப்பிட்ட ஆண்டில் தான் நடைபெறும். ஏனெனில் அப்பண்டிகைக்கு நிரம்ப செலவும் சிரமமும் ஏற்படும். ஆகவே, அப்பண்டிகையை மிகச் செழிப்பு நிறைந்த ஆண்டில் மட்டும் நடத்துவார்கள். அதில் தேவாங்கர்கள் கொடியாகிய நந்தித்துவசத்தை ஏற்றுவார்கள். பிறகு மஞ்சள் நீர் எடுத்து வந்து கோயிலில் கலசம் வைத்து ஆவாரஞ் செடியின் கீழ் அம்மனை நிறுத்தி அபிஷேகாதிகள்

செய்து சுவாமியையும் அம்மனையும் தெருத்தெருவாக ஆரோகணம் செய்விப்பார்கள். அப்போது முதலில் அலகு நிறுத்தி உபவாசம் இருந்த சில வாலிபர்கள் கத்தி விளையாட தேவதைகளில் மெரமனை நடைபெறும். இவ்வாறு பல நாட்கள் பல தெருக்களிலும் பல சிற்றூர்களிலும் பவனி செல்வதுண்டு. பூஜைகள் மிகப் புகழோடு நடத்துவார்கள். மெரமனையின் போது கத்தி போடுவதுண்டு. இந்த வழக்கத்திற்குப் புராணத்தில் ஆதாரம் இல்லாமல் போனபோதும் நடைமுறையில் உண்டு.

கத்திகளை மார்புகளின் மீது அடிக்கும்போது காயங்களும் ஏற்படுவதுண்டு. ஆனால், அதற்கு மஞ்சள் பொடி தூவ ரத்தம் நின்று போய் காயம் ஆறிவிடும்.

இந்த முறையில் விழா பல நாள் நடக்கும் ஒவ்வொரு தெருக்காரர்களும் மூர்த்திகளை மண்டபத்தில் நிறுத்தி அபிஷேகமும் சிறப்பு பூஜைகளையும் நடத்தி சமாராதனைகளை நடத்துவார்கள். பவனி செல்லும் காலத்தில் அழகான தாண்டகங்களைச் சொல்லி பூஜை செய்வது உண்டு. அத்தாண்டகங்களில் அம்மனுடைய திருப்புகழையும் ஓதுவதுண்டு. இறுதி நாளில் மஞ்சள் நீராடி, கொலுவில் வைத்து பூஜை செய்து திருவிழாவைப் பூர்த்தி செய்வார்கள். அம்மன் பண்டிகைகள் நாட்டில் தொத்து வியாதிகள், துர்நிமித்தங்கள் இவைகள் ஏற்படும் காலங்களில் அவைகளை நீக்குவதற்காகப் பிரார்த்தித்துக் கொண்டாடுவதுண்டு.

வழக்கங்கள்:

பிறந்தது முதல் இறப்பது வரையில் நடக்கும் சடங்குகள் பொதுவாக, இந்துக்களில் நடைபெறும் வழக்கங்களே ஆகும். சிற்சில இடங்களில் சில மாறுதல்கள் இருக்கக்கூடும். வடமேற்கிலும், வடகிழக்கிலும் லிங்கதாரிகளில் சில வேற்றுமைகள் அதிகம். கன்னடத்திற்கும் தெலுங்கிற்கும் சிறிது பேதம் உண்டு. லிங்காயத்துகள் அத்தகையவர்கள். மது மாமிச உணவு இல்லை. மற்றவர்களில் கலப்பு உண்டு. தெற்கே தெலுங்கரில் மறு விவாகம் இல்லை. கன்னடியர்களில்

உண்டு. கீழ்நாடுகளில் கிழக்கத்தியர்கள் மேற்கத்தியர்கள் என இரு பிரிவு உண்டு. கிழக்கு மக்களில் அவர்களுக்கென்று சில அடிப்படைக் கூறுகள் உண்டு. ஆனால் மேற்கத்தியர்களுக்கு அவ்வாறு ஏதும் கிடையாது. சிந்தனைகள் வேறுபாடுகளுடன் இருக்கின்றன. இவைகள் நாலாவட்டத்திலும் மாறுதல் அடைந்து தற்போது வேற்றுமைகள் குறைந்துகொண்டு வருகின்றன. பிறப்புத் தீட்டு லிங்காயதர்களுக்கு இல்லை. மற்றவர்களுக்கு உண்டு. குழந்தைகளுக்குத் தலைமுடி இறக்கும் வழக்கம் உண்டு.

பிரார்த்தனை இருந்தால் காவடி எடுப்பதுண்டு. லிங்காயத்தார்களில் தீட்சை உண்டு. ஆனால், மற்றவர்களில் பூணூல் தரிப்பதுண்டு. அது பெரும்பான்மையாக கல்யாணத்தின் போது நடைபெறும். கல்யாணம் பிற சத்திரத்தில் நடக்கக்கூடாது. ஒவ்வொரு குடிக்கும் வீட்டுப் பெரியவர் உண்டு. அவரை அழைத்துத் தான் கல்யாணம் நடக்கும். கல்யாணத்தில் பூணூலுக்குப் பிறகு அரசக்கிளை கொண்டு வந்து மூர்த்தக்கால் நடுதல், அரவணைப்பானைகள் கொண்டு வரல், மஞ்சள் ஆடை, கால் மிஞ்சுகள் கொண்டு வரல், பாசிங்கம் கட்டுதல், கங்கணம் கட்டுதல், மாங்கல்யம் கட்டுதல், அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல், தீவலம் செய்து சபதமிடல், நாகமல்லி செய்தல், மஞ்சள் நீராடி புதுமனைப் புகுதல், கன்னிகை தொழுதல் முதலிய சடங்குகள் நடைபெறும். ஊஞ்சல், மெரமனை ஆடல் பாடல் விருந்து முதலியன செல்வத்தைப் பொறுத்து நடைபெறும். பரியம், மொய் முதலியவை இடத்திற்கு இடம் மாறுபடும்.

சாவு ஏற்பட்டால் பிணத்தை வீட்டில் பூஜை செய்து பாடையில் எடுத்துச் சென்று இடுகாட்டில் குழிதோண்டி உட்கார்ந்த நிலையில் புதைப்பார்கள். திருநீறு மிகுதியாகக் குவிப்பதுண்டு. சமாதியின் பேரில் நற்சமாதிக் கல்சாசனம் போடுவதும் உண்டு. 3-ம் நாள் பால் வார்த்து பதினோராம் நாள் சடங்கு நடத்துவதுண்டு. தானதர்மங்கள் சிரார்த்தங்கள் முதலியவை கண்டு பிறகு குலத்தார்க்கு விருந்தும் மோட்ச

தீபமும் எடுப்பதுண்டு. இந்தச் சடங்குகளுக்குச் சாதி புரோகிதர்கள் உடனிருந்து செய்விப்பார்கள். ஆண்டுதோறும் திதி செய்வதுண்டு. தேதி மறந்தவர்கள் புரட்டாசி மாதத்தில் செய்வார்கள். பெரும்பான்மையாக மணப்பது ஒரே பெண்ணைத்தான். ஆனால், குழந்தை இன்றியும் மனைவி நோயாளியாகவும் இருந்தால், அவள் அனுமதியின் பெயரில் மறுமணம் நடைபெறலாம். தெலுங்கர்களில் மறுமணம் இருக்கின்றது. கன்னடத்தில் சிறிது அதிகம். பெண்களுக்கு மறுமணமும் அதே விதம்தான். விபச்சாரம் கண்டிக்கப் படுகிறது. அப்படி ஏற்பட்டால் குலத்திலிருந்து விலக்கப்படுவார்கள். வேறு வகுப்பில் வைப்பு வைத்துக் கொண்டாலும் இதே நடை உண்டு. தேவாங்கர்களில் சிவாச்சாரியர்கள் வேறு வீடுகளில் உண்ண மாட்டார்கள். மற்றவர்கள் பிரமாணர் அன்றி வேறு வகுப்புகளில் உண்ண மாட்டார்கள். இப்போது இந்த வழக்கம் மாறிவருகிறது.

பொதுப் பண்பாடு

வகுப்புத் திட்டத்தில் தேவாங்கர் மிக உயர்ந்த நிலையைப் பெற்றவர்கள். சிலர் பிராமணர்களுக்குச் சமமானவர்கள் என்று ஆதாரம் காட்டுவர். மற்றவர் பிராமணர்களுக்கு அடுத்தபடியில் உள்ளவர்கள் என்பர். அதை முன்னிட்டு சிரார்த்தத்தில் சர்மா என்று சிலர் தம் பெயருக்குப் பிந்தியும் சிலர் வர்மா என்றும் கூறுவர். ஆனால், தற்காலத்து முன்னேற்றத்தில் இதனைச் சிந்திப்பவர்கள் இல்லை. கல்வி நிலையத்தில் வட பிராந்தியங்களில் அது மிகக் குறைவு. தென்மாவட்டங்களில் சமமாக இருக்கும். பொதுவாக தேவாங்கர்களுக்கு எழுத்தில் குலத்தால் படிப்பில் பின் தங்கியவர்கள் என்று விடுக்கப்பட்டு இருக்கிறார்கள். நகரங்களில் பெரும்பான்மையாக எல்லோரும் படித்தவர்களே. ஆனால், நாட்டுப்புறத்தில் அறியாமையே மிக உண்டு. தற்போது மக்களில் உள்ள உற்சாகத்தினால் பல இடங்களிலும் பாடசாலைகள், வாசக சாலைகள், சங்கங்கள் முதலியவைகளை வைத்து நடத்திவருகிறார்கள். ஆனால், மக்களே அன்றிப்

பெண்களும் உயர் படிப்பு பெற்று அரசியல் அலுவலகங்களுக்குச் செல்லுகின்றார்கள். பட்டதாரிகள் பெருகிக் கொண்டே வருகிறார்கள்.

தெலுங்கு, தமிழ் முதலிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்று கவிஞர்களாகவும் அமர்ந்திருக்கிறார்கள். இந்த வகையில் ஏனைய மக்களுக்கு அறிவாற்றலில் குறையாத வகையில் தேவாங்கர்கள் இருக்கிறார்கள். ''நாட்டில் மக்கள்தொகை எடுத்துப்பார்த்தால், மேற்கே கோவை, சேலம் வடக்கே கோதவர், கிழக்கு வட்டங்களில் தொகை மிகுதி''. படிப்பிலே கோவை, சேலத்தில் தான் மிகுதி என்று அறிய வேண்டும். படிப்பு அதிகமாக ஆக சமூகத்திலும், செல்வாக்கிலும் தேவாங்கர்கள் தோன்றியவர்களாக விளங்குகிறார்கள். நாட்டுப்புறத்தார் வறுமையினால் பீடிக்கப்பட்டு சக்தி அற்றவர்களாக இருக்கிறார்கள். பொருளாதார விஷயத்தில் தேவாங்கர்கள் மிகத் தாழ்ந்தவர்கள் என்று சொல்லுவதற்கு இல்லை. குலத்தொழில் ஒன்று எல்லோருக்கும் உண்டு. எந்தக் காலத்திலும் பாடுபடுகிறவனுக்கு வயிற்றுக்குக் கஞ்சி உண்டு. ஆண் மக்கள் நெசவில் ஈடுபட்டால், பெண்மக்கள் அவர்களுக்கு உதவி செய்வார்கள்.

ஆகவே, குடும்பம் முற்றும் ஒரே தொழிலைக் குறிக்கோளாக வைத்துக்கொண்டு குடும்பப் பாதுகாப்பு செய்வார்கள். ஆகவே, குடும்பத்தில் ஒற்றுமை நிலையச் சாதனங்கள் உண்டு. ஆனால், நெசவுத்தொழிலில் ஒரு குறைவு உண்டு. அதாவது, நூல் முதலிய உபகரணங்கள் பெறுவதற்குப் பிற மக்களின் உதவி வேண்டும். அரசியல் புரட்சியிலும், போர்களிலும் நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் நெசவாளர்களுக்குச் சிரமம் ஏற்படும். அப்போது, பிறரால் தான் அவனுக்குச் சிரமம் ஏற்படுகிறது.

தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளும் ஆற்றல் கிடைக்கும் போது அவன் நிலை மிகவும் சீர்பட்டு இருக்கும். தற்போது, இயந்திரப் புரட்சியாலும் அவனுக்குத் துன்பம்

தொடங்கி இருக்கிறது. அதனையும் தொலைப்பதற்கு கூட்டுறவினால் அவன் முயற்சி எடுத்துக்கொள்ளக்கூடும். உலகப் போருக்குப் பிறகு ஏற்பட்ட தொந்தரவுகளுக்குப் பின் நெசவாளனும் விழித்துக் கொண்டு, நெசவு ஒன்றே தனக்குப் போதுமான வேலை கொடுப்பதில்லை என்றும் ஆகவே, எந்திர விசைத்தறிகளையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் முயற்சித்து வருகிறான். நூல் நூற்பதிலும், உழவுத் தொழிலிலும் தான் ஈடுபட வேண்டும் என்று எண்ணத் தொடங்கினான். இது மட்டுமா அரசியல் அலுவலகங்கள் மானியம் மற்ற தொழில்கள் முதலியவற்றிலும் அவன் புக எண்ணுகின்றான். இந்தவகையில் அவனுடைய பொருளாதார நிலையைச் செம்மையாக்கக் கூடும். உலகில் ஏனைய மக்களையும் போல் தானும் சிறந்து விளங்க தேவாங்கன் முயற்சித்துக் கொள்ளுகிறான்.

வரலாற்றுச் செய்திகள்

பண்டைய அரசுகள் நெசவுத்தொழிலுக்கும் நெசவாளிகளுக்கும் மிகுந்த சலுகை காட்டி இருக்கிறார்கள். இதற்கு, பண்டைய கல்வெட்டுச் சான்றுகள் நிரம்ப உண்டு. தென்னிந்தியக் கோயில்களில் உள்ள கல்வெட்டுகளில் கணக்கற்ற சாசனங்கள் நெசவாளர்கள் பற்றியவைகளாக இருக்கின்றன. சோழர்கள் காலத்திலேயே நெசவுத் தொழிலுக்கு மிகுந்த சலுகை காட்டி, கோயில்களுக்கு வெளியே மடவளாகங்களில் கிடங்குகளைக் கொடுத்து நெசவாளர்களைக் குடியேற்றியும், அவர்கள் தொழில்களுக்கு இலவசமான வரிகளை விதித்தும் நிலங்களைத் தந்தும் உதவி புரிந்து இருக்கிறார்கள். மேலும் விஜயநகர ஆட்சியில் இப்படிப்பட்ட உதவிகள் மிகவும் அதிகமாக ஏற்பட்டன. வடக்கே ஹம்பி நகரிலிருந்து தேவாங்கர் முதலிய நெசவாளர்களைத் தெற்கே குடியேற்றி நெசவாளர் தொழிலுக்கு மிகுந்த ஆதரவு காட்டி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட உதவிகள் தமிழ் ஜில்லாக்கள் எல்லாவற்றிலும் நடந்தன.

விஜயநகரப் பேரரசு தலைக்கோட்டை யுத்தத்தில் தொலைந்த பின்னர், ஹம்பியில் இருந்த தேவாங்கர்களுக்கு அங்கு வசதி இல்லாமல் போக, அவர்கள் தென்னாடுகளுக்குக் குடியேறினார்கள். அப்போதுதான் ஹம்பியில் இருந்த தேவாங்கர் குருபீடம் க்ஷீணிக்கத் தொடங்கியது. தென்னாட்டில் பல நகரங்களிலும் தேவாங்கர்கள் ஆயிரக்கணக்காகக் குடியேறி தம் தொழிலை விருத்தி செய்தார்கள். அப்போது, விஜயநகரத்துச் சாமந்தர்களான நாயக்க மன்னர்கள் கோயில்களுக்கு அருகில் வெறும் இடங்களில் வீடுகளைக் கட்டிக்கொள்ள அனுமதி தந்தார்கள். இந்த முறையில் நெசவுத் தொழிலுக்குச் சலுகை காட்டப்பட்டது.

மேலும் வரி கொடுக்க இயலாத மக்களுக்கு, வரிகளைக் குறைத்தும் கோயில் நிலங்களில் சாகுபடி செய்யக் கொடுத்தும், சேரிகள் ஊர்கள், தெருக்கள் முதலியவற்றைக் கொடுத்தும் பலவகை வசதிகள் தந்தும் உதவி புரிந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இந்த வகையில் சலுகை காட்டி இருப்பதினால் இந்தக் குலத்தார்களும் மற்ற நெசவாளிகளும் தென்மாவட்டங்களில் மிகுதியாகக் குடியேறி தங்கள் தொழில் வாணிபம் முதலியவைகளுக்குப் பலவகையாக உதவி புரிந்து இருக்கின்றனர். இந்தக் கல்வெட்டுகளில் உள்ள செய்திகளில் இருந்து தறியின் மீது ஏற்பட்ட வரி விகிதங்கள் இன்னவை என்று தற்போது கணக்கிட்டுக் கூற முடியும்.

விஜய நகரத்தார்களும் நாயக்கமார்களும் போன பிறகு சில முகமதிய சிற்றரசர்கள் தெற்கே தோன்றினார்கள். அவர்கள் காலத்தில் நெசவாளர்களுக்கு யாதொரு சலுகையும் இல்லை. பிறகு ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் வாணிபத்தின் பொருட்டு தென்னிந்தியாவை நாடினார்கள். அவர்கள் இந்தியாவில் இருந்து தங்கள் நாடுகளுக்குத் துணி ஏற்றுமதி செய்வதற்காக நெசவாளர்களை ஆதரித்தார்கள். சென்னை, புதுச்சேரி முதலிய ஊர்களைச் சுற்றி நெசவாளர்களுக்கு வேலையும் கூலியும் கிடைத்தன. சில நெசவாளர்களுக்கு

அவர்கள் பட்டயங்களும் கொடுத்தார்கள். ஆனால், ஆங்கிலேயர்கள் வாணிபத்தை விட்டு நாடுபிடிக்கும் நோக்கத்தில் புகவே, இந்திய நெசவுத்தொழில் நசிந்து ஆங்கிலேயர் நெசவுத் தொழிலை ஆதரித்தார்கள். அப்போது இந்திய நெசவாளிகள் மிகவும் துன்புறுத்தப்பட்டனர். ''பிறகு, ஆங்கிலேயர்கள் ஆட்சி கொள்ளவே நெசவாளியின் நிலை ஒருவாறு முன்னேற்றமுற்றது. இந்த நிலையில் நெசவின் வரலாறு சென்று கொண்டு வந்தது''.

அம்மன் அருளிய வரங்கள்

எங்கள் குலத்தார்களில் சில அரிய பழக்கவழக்கங்கள் உண்டு. இவைகள் பண்டைய காலம் முதற்கொண்டே உள்ளவைகள். சௌடாம்பிகை அம்மன் திருவருளால் அவைகள் விளங்குகின்றன. புராண ஐதீகமும் அவைகளுக்கு அம்மன் வரப்பிரசாதமே காரணம் என்று கூறுகின்றன. திங்கள் முழுவதும் குலத்து மக்கள் வேலை செய்து அமாவாசை அன்று அவர்கள் ஓய்வெடுத்துக் கொள்வார்கள். அதனை ஐதீகமும் ஒரு வரப் பிரசாதம் என்று விளக்குகிறது. தேவல முனிவனைப் இராக்கதர்கள் எதிர்க்க அமாவாசை இரவில் தேவலனின் உயிரை அம்மன் காத்ததும், அதே இரவில் தான் வெற்றியின் பிறகு நாயகியை தேவலன் துதிக்க அம்மன் காட்சி தந்து ''முனிவனே அமாவாசை இரவில் நீ என்னைத் துதிக்க நான் உன்னைக் காத்தோம். ஆகவே, நீ உதித்ததும், நாம் உதித்ததும் அதே இரவு தான். ஆகவே, அமாவாசையில் நீயும் உன் குலத்தாரும் நெசவை விட்டு ஓய்வெடுத்துக் கொண்டு எம்மைத் தொழுவாய் உங்களுக்கு சகல சம்பத்தும் கிடைக்கும்'' என்று வரம் தந்து மறைந்தாள். அதுதான் ஐதீகம்.

மேலும் குலத்தார்களுக்கு நந்திக்கொடியும், சந்திர வாட்படையும் உண்டு. இவைகளும் இறைவனின் அருள்வகையில் கிடைத்தன. தேவலன் இறைவனுக்கு ஆடை வழங்கின போது, இறைவன் மகிழ்ந்து இடபக்கொடியும் சந்திர வாள் ஆயுதமும் அளித்தார். அவைகள், தன் வசம் இருக்கும்

அளவும் அவனுக்குத் தோல்வி இல்லை. ஒரு கால் அரக்கர்கள் கொடியை வஞ்சகத்தால் பெற்றனர். அதனால், தேவலன் தோல்வியுற்றுப் பகைவரிடம் சிறையானான். அவ்வித வஞ்சகம் தவிர்க்க வேண்டியது மக்கள் கடமை. இப்பொழுதும் இடபக் கொடியே குலத்தாரின் கொடி.

தேவலன் அரசனாகி ஆமோத நகரில் ஆட்சி புரிந்து இந்திரனுக்கு உதவியாக அசுரர்களோடு போர்புரிந்தான். அப்போது அவன் குடிமக்களான தேவாங்க குலத்தார்கள் போரில் ஈடுபட்டு வீரர்கள் ஆனார்கள். இவர்கள் சத்திரிய தொழிலைப் பூண்டு போர்புரிந்தார்கள் என்பதற்கு அறிகுறியாக இன்றைக்கு அம்மன் திருவிழாக்களில் கத்தி எடுத்துக்கொண்டு சில வாலிபர்கள் அங்கு குமாரர்கள் என்ற பெயர்களோடு அம்மன் முன்னிலையில் மார்பில் கத்தியால் அடித்துக் கொள்வார்கள். ஆனால், இந்தச் செயலுக்கு ஐதீகத்தில் இடமில்லை. புராண வரலாறும் இல்லை. வெறும் பழக்கம் தான் ஆகும். அதை இந்தப் பகுத்தறிவு நாளில் விடவேண்டியது தான். நெசவுத் தொழிலுக்கு இறைவன் வரம் இருந்தது. அதற்கு உபகரணங்களாக ஆயுதங்கள் பல வேண்டும். இறைவன் ஆணையால் விசுவகர்மனுடைய உதவி கிடைத்தது. இன்னாளிலும் நெசவுப் படைக்கலன்கள் இந்த முறையில் ஆக்கப்படுகின்றன. இன்றும் தறிக்கு அச்சு கட்டு வேண்டும். அதனைச் சிங்க உட்குலத்தார்கள் செய்கிறார்கள்.

தேவலனை அசுரர்கள் பிடித்தபோது, அம்மன் அவர்களை வதைத்த காலத்தில் சில அசுரர்கள் சிங்கத்தின் காதில் மறைந்து கொள்ள, அப்படித் தப்பின அவர்களுக்கு அபயம் தந்து தன்னிடம் ஆளாக தேவலன் எடுத்துக்கொண்டான். அவர்கள் வம்சம் தான் சிங்ககுலத்தார். இப்போதும் அவர்கள் குலத்தார்களின் சேவகத்தைச் செய்து வருகிறார்கள். இறுதியில் தேவலன் லிங்க வடிவமானதாகப் புராணம் கூறும். இன்றைக்கு குலத்தில் இறுதியடைந்த -வர்களைச் சமாதி செய்து லிங்க வடிவமாக சில சடங்குகள்

நடத்துகிறார்கள். இவை முதலான பழக்கவழக்கங்கள் சௌடாம்பிகையின் வரப்பிரசாதத்தாலும், தேவலன் ஆட்சியாலும் வந்தவை என அறிய வேண்டும். அவ்வாறு வரப்பிரசாதம் தந்தருளிய அம்மனை, சேவை செய்வோமாக.

தேவலன் சம்பவம்

எண்ணிக்கையற்ற கதிரவர்கள் ஒன்று சேர்ந்தாற் போல ஒளி திகழும் புனித ஞானமலை கைலாய மலையாகும். அம்மலையில் அழகிய விமானத்தில் அரியாசனத்தில் சிவபெருமான் பார்வதி தேவியுடன் கொலுவீற்றிருப்பார். அவர் சன்னதியில் ஜீவன் முத்தர்களான கணக்கற்ற ஞான முனிவர்கள் வணங்கிக் கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட அழகிய கொலு மண்டபத்தில் இறைவன் முன்னாலே வீற்றிருக்கும்போது பிரபஞ்சத்தைப் படைக்கும் திருவிளையாடலை எண்ணி இதயத்தில் சங்கற்பம் செய்து கொண்டார். உடனே பராசக்தி ஜோதி உருவம் தாங்கி மூவித குணங்களுடனே எதிரே தோன்றினாள். அருளே திருமேனியாய்க் கொண்ட சிவபெருமான் பராசக்தியை நோக்கினார். அப்போது ராஜச குணத்தில் நான்முகனும் சத்துவ குணத்தில் திருமாலும், தாமச குணத்தில் காலருத்திரனும் தோன்றினார்கள். மூவரையும் இறைவன் பார்த்து நீங்கள் படைப்பு, காப்பு, அழித்தல் முதலிய தொழில்களைச் செய்யுங்கள் என்று ஆணையிட்டார். அம்மூவரும் வணங்கிச் சென்று அந்த முத்தொழில்களில் ஈடுபட்டார்கள்.

நான்முகன் உலகம் முதலியவைகளைப் படைத்து, அவர்களை ஆள, மனு என்ற ஒரு புண்ணிய சீலனைப் படைத்தார். அவனை நோக்கி, படைத்த உயிர்களுக்கு ஆடைகளை உண்டாக்கி அளிக்கும்படி ஆணையும் இட்டார். அவ்வாணையைப் பெற்ற மனு காம்பிளி நகரில் சென்று அருமையான ஆடைகளை நெய்து எல்லாப் பகுத்தறிவாளர்களுக்கும் வழங்கி, வெகுபுகழுடன் புண்ணிய

சீலன் என்ற பெயர் விளங்க வீற்றிருந்தார். உலகிற்குச் சேவை செய்து நீண்ட நாள் நற்பெயர் பெற்று அதன் பயனாக மனு என்ற புண்ணிய சீலன் சிவபெருமானிடம் சாயுச்சியம் அடைந்தார்.

பிறகு உலகில் ஆடை நெய்வார் இன்றி, தேவர் மக்கள் முதலிய பகுத்தறிவாளர் எல்லாம் நாணம் நீங்க மர உரிகள், இலைகள் முதலியவற்றை உடுத்துக்கொண்டு வருந்தியிருந்தார்கள். இக்குறையை, தேவர்கள் நான்முகனிடம் முறையிட அவர்களை அழைத்துக் கொண்டு நான்முகன் கைலாயம் சென்று பரமசிவனை நோக்கி வணங்கினார்கள். இறைவன் அவர்கள் குறைகளை வினாவி ஒரு கணம் மௌனமாக இருந்தார். உடனே அவரது இதயத் தாமரையிலிருந்து ஒரு திவ்ய முனிவன் தோன்றினான். மிகப் புனித ரூபியான அம்முனிவன் ''இறைவனை நோக்கி; சாயுச்சியத்தில் இருந்த தன்னை அழைத்ததன்'' விவரம் யாதென அருளும்படி விண்ணப்பித்தான்.

இறைவன் அப்புனித முனிவனை விளித்து உனக்கு தேவலன் என்ற பெயர் தருகிறோம். நீ உலகிற்குச் சேவை செய்து ஆடைகளை நெய்து எல்லோருக்கும் வழங்க வேண்டும். திருமாலிடம் சென்று நாபிக் கமலத்தில் உள்ள நூலை வாங்கி ஆடையாக்குவாய் அவ்வாறு சேவை செய்து மனித பிறப்பில் நெறி தவறாது நடந்து மீண்டும் சிவ மயம் அடைவாய். தேவர்களுக்கு ஆடை வழங்கி அவர்களது அங்கங்களை அலங்கரிப்பதற்கு உனக்கு தேவாங்கர் என்ற பெயரும் ஏற்படும். உலகில் ஆமோத நகரத்தில் சென்று அதனை ஆண்டு செங்கோல் செலுத்தி இருப்பாய் என்று அருளினார். அந்த ஆணையை சிரம்மேல் ஏற்றுக் கொண்டு தேவலன் உலகிற்கு வந்தான். (தேவலன் என்றால் தெய்வத் தன்மையில் வல்லவன் என்று பொருள்).

சௌவுடநாயகி வரம் தந்தது:

சிவபெருமான் ஆணையின்படி திருமாலிடம் சென்ற தேவல முனிவன் திருப்பாற்கடலை அடைந்தான். அங்கே கருடனுடைய அழகிய பன்னகசாலை கண்டு அங்கே ஒரு அழகிய இடத்தில் திருமாலைக் குறித்துத் தவம் செய்தான். வைராக்கியத்தோடு தவம் செய்த காரணத்தினால் திருமால் மிகுந்த மகிழ்ச்சி கொண்டு கருட வாகனத்தின் மேல் காட்சி தந்தார். தேவலன் திருமாலைத் துதித்து, சிவபெருமான் ஆணையால் தான் நூல் பெற வேண்டி வந்ததாகக் கூறினான். திருமாலும் களிப்பெய்தி தன் உந்திக் கமலத்தில் இருந்து நூலை எடுத்துக்கொடுத்து ஆடைகள் நெய்து உலகத்து உயிர்களுக்கும், தேவர்களுக்கும் அளிப்பாயாக என்று அருளிச்செய்து மறைந்தார்.

பின்னர், தேவலன் திருப்பாற்கடலை விட்டு நாவலத் தீவுக்கு வந்து அங்கே ஒரு அழகிய சோலையைக் கண்டு அங்கே தங்கினான். அச்சோலையில் ஒரு பன்னக சாலையில் பல மாணாக்கர்கள் புடைசூழ முனிவர் வேடத்துடன் ஒருவன் இருக்கக் கண்டு அங்கே போய்ச் சேர்ந்தான். அம்முனிவன் தேவல முனிவனைக் கண்டு நீ யார்? இங்கே வந்ததன் காரணம் என்ன? என்று கேட்டான்.

சிவபெருமான் ஆணையால் ஆடை செய்வதற்காக திருமாலிடம் நூல் வாங்கி வந்த விவரத்தை தேவலன் புகன்றான். அதற்கு அம்முனிவன் பல கனிகளைத் தந்து பகல் நேரம் போக்கி அங்கு இரவு தங்கிப் போகும்படி கேட்டுக் கொண்டான். தேவலனும் தங்கினான். இரவு வந்தது. எங்கும் இருள் சூழ்ந்தது. தவ வேடம் பூண்டிருந்த முனிவர் கூட்டம் எல்லாம் கொடிய அரக்கராக மாறினார்கள். பயங்கரமான ஆயுதங்களைக் கையில் ஏந்திக் கொண்டு எங்கும் நடுங்கும்படி பெருகினார்கள். அவர்களில் வச்சிரதந்தன் என்ற தலைவனும் புகைமுகன், புகை நேத்திரன், சித்திரசேனன், பஞ்ச சேனன் என்ற சேனாதிபதிகளும் அரக்கர் சேனைகளை

நடத்திக் கொண்டு தேவல முனிவனோடு போர்புரிய நெருங்கினார்கள்.

தேவலனோ வஞ்சகம் செய்த தீயோரைக் கண்டு வேறுவழி இன்றி, திருமாலைத் துதி செய்தான். உடனே, திருமால் தன் சக்ராயுதத்தை ஏவினார். அவ்வாயுதமோ எவரும் அஞ்சும் படி அசுரர்களைக் கண்டம் துண்டம் ஆகிற்று. ஆனால், அசுரர்களுடைய ரத்தத் திவலைகள் விழுந்த இடம் எல்லாம் புதுப் புது அசுரர்கள் தோன்றினார்கள்.

போர் வலுத்தது

சக்கராயுதமும் இளைத்து ஓய்ந்தது. அது கண்ட தேவலமுனிவன் பார்வதி தேவினுடைய திருவடிகளைத் துதித்தான். அத்துதிக்கு இரங்கி தேவி தோன்றினாள். அழகிய நான்கு புஜங்களோடு கொடிய ஆயுதங்களைத் தரித்துக் கொண்டு சிங்க வாகனத்தின் மீது எழுந்தருளிக் காட்சி தந்தாள். தேவலன் அன்னையை வணங்கி அசுரர்களை வதைத்து தன்னைப் பாதுகாக்குமாறு வேண்டினான். தேவியோ அரக்கர்களை வதைத்தாள். தேவியினுடைய பிரகாசம் பொருந்திய கிரீடத்தின் ஒளியானது அசுரர்களின் கண்களை மழுங்கச் செய்தது.

திருமுடி மிகுந்த ஒளி வீசியதால் தேவிக்கு சௌட நாயகி என்ற பெயர் ஏற்பட்டது. இராக்கத வீரர்கள் கொல்லப்பட்டு இரத்தம் சிந்தினவுடன் அதிலிருந்து வேறு இராக்கதர்கள் தோன்றினார்கள். இதனைக் காரணங்கண்டு சிங்க வாகனம் ஒரு துளியும் நிலத்தில் விழாதபடி ரத்தம் முழுவதையும் குடித்து விட்டது. ஆகவே, புதிதாக இராக்கதர்கள் எழும்பாமல், எதிர்த்தவர்கள் இறந்தார்கள். இவ்வாறு இரத்தத்திவலைகள் முழுமையும் மாய்ந்து போக இரண்டு திவலைகள் மட்டும் சிங்கத்தின் செவிகளில் மறைந்திருந்தன. அவைகளில் தோன்றிய இரண்டு அரக்கர்கள் தேவல முனிவனுடைய அடிகளில் அடைக்கலம் புகுந்தார்கள். சவுடநாயகி அவர்களைக் கொல்லாமல் விடுத்து தேவலனுக்குப்

பிள்ளைகளாக இருக்கும்படி அருள் செய்தாள். அது முதல் அவ்விருவரும் பிள்ளைகள் ஆனார்கள். தேவலன் அரக்கர்களுடைய ரத்தத்தில் நூலைத் தோய்த்து ஐந்து வண்ணங்களாகச் செய்தான். தேவி கிரீடம் அணிந்ததால் சௌவுடநாயகி என்று திருநாமம் பெற்று தேவலனை நோக்கி அபயம் தந்தாள்.

''முனிவனே உனக்கு எந்தத் துன்பம் நேரிட்டாலும் என்னை நினைப்பாயாக, துன்பத்தை நீக்குவோம். அமாவாசை இரவில் ராக்கதர்களால் துன்பப்பட்டாய், என்னை நினைத்தாய், யாம் தோன்றி உன்னைக் காத்தோம். ஆகவே நீ உயிர் பெற்ற நாளும் இதுவே. நான் தோன்றுகின்ற நாளும் இதுவே. ஆகவே, எக்காலத்திலும் அமாவாசை வந்தால் அன்று நீயும் உன் குலத்தார்களும் நெய்யும் தொழிலை நீக்கி எம்மைத் தியானிப்பீர்களாக. அப்போது வெற்றியையும் சிறப்பும் பெருகும். தவறினால் துன்பம் வரும்'' என்று வரம் தந்து மறைந்தாள். இவ்வாறு வரத்தைப் பெற்றுக் கொண்ட தேவலன் ஆமோத நகரம் சேர எண்ணிச் சென்றான்.

தேவல முனிவனை எதிர்த்த அரக்கர்கள், முன்னதால், திருமால் யோக நித்திரை புரிந்த காலத்தில் தோன்றிய வியர்வையில் உற்பத்தியானவர்கள். அவர்கள் தான் வச்சிரதந்தன் முதலிய ஐந்து பேர்கள். அவர்கள் தோன்றிய உடனே திருமாலின் மீதே போருக்குச் சென்றார்கள். அவர்கள் வீரத்தைக் கண்டு முகம் மெச்சி திருமால் அவர்களுக்கு வரம் தந்தார். சக்கராயுதினால் அழிக்கப்படாத வரம் அதுவாகும். பிறகு ஐவரும் சுக்ரனுடைய பர்ணசாலைக்குப் போனபோது சுக்கிரன் பெண் சுதை என்பவளின் அழகில் ஈடுபட்டு காம பரவசர்களாய்த் தகாத சொற்களைச் சொன்னார்கள். அக்கொடிய சொற்களைக் கேட்டு அப்பெண்மணி அவர்களைச் சபித்து தன்னைப்போல் ஒரு பெண்மணியால் இறக்கக் கடவர்கள் என்று கூறிச் சென்றாள்.

சாபத்தால் வாடிய அரக்கர்கள் சிவபெருமானைத் துதித்து தவம் செய்து தங்களுடைய உதிரத்தால் தேவர்களும் அலங்கரித்துக் கொள்ள வேண்டும் என்று வரம் பெற்றுச் சென்றார்கள். இது அரக்கர்களுடைய பழைய வரலாறு. இனி சௌடாம்பிகை நாயகியால் கொல்லப்பட்ட வச்சிரதந்தன் முதலிய 5 அசுரர்களுடைய ரத்தமும் ஐந்து வண்ணங்களைப் பெற்றிருக்க, அவைகளைக் கொண்டு நூலை நனைத்து ஐந்து நிறம் ஏற்றினான். அந்நிறங்கள் ஆவன செம்மை, வெண்மை, கருமை, பசுமை, பொன்மை என்பன. அவ்வாறு ஐந்து நிறம் இயற்றிய நூலால் ஆக்கப்பட்ட ஆடைகளை சிவபெருமானுடைய வரம் தவறாதபடி தேவர்கள் முதலிய எல்லோரும் விருப்பத்துடன் அணிந்து கொண்டார்கள்.

தேவலன் முடிசூட்டு விழா

பிறகு தேவல முனிவன் பல நாடுகளையும் கடந்து சகர நாட்டு ஆமோத நகரம் சேர்ந்தான். அந்நகரம் மிகுந்த செல்வமும், செழிப்பும் கொண்டு வெகு அழகாக விளங்கியது. மிக மகிழ்ச்சியுடன் தேவலன் அந்நகரம் அடையவே நகரத்து அரசர் சுநாபன் தன் அமைச்சர் குலத்துடன் எதிர் சென்று தேவல முனிவனுக்கு வரவேற்பு அளித்து தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று சிங்காசனத்தில் அமர்த்தினான். அந்நகர மக்கள் கொடிகள், பதாகைகள் கட்டி தேவலனை மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். பிறகு, சுநாப மன்னன் தேவலனுக்கு நகர மன்னனாக முடிசூட்டினான். தேவலனும் அந்நகரத்திற்கு அரசன் ஆனான்.

முடிசூட்டுதல் முடிந்ததும் சுநாப மன்னன் தேவலனை விளித்து அரசனே நான் புறப்படுகிறேன் விடை அருளுக என்று கேட்டான். தேவலன் அதனைக் கேட்டு ஆச்சரியமடைந்து மன்னனே நீ ஏன் செல்ல வேண்டும் என்னுடனே இருந்து ஆட்சியில் எனக்கு உதவி செய்வாய் என்று மன்றாடி வேண்டினான். நான் செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றான். அது எப்படி என்று தேவலன் கேட்க

சுனாபன் கூறினான். ‘‘மன்னா என்னுடைய முக்கிய வரலாற்றையும் கேட்பாயாக; நான் கின்னரர்களின் அரசன் உருக்கமதரன் என்றவனுடைய புதல்வன். என் மனைவி சித்திர என்பாள்.

ஒரு நாள் என் மனைவியுடன் கைலாய மலையை அடைந்தேன். அங்கே பெருமான் இறைவியோடு தனியே இருக்கும் அழகிய சோலைக்குள் புகுந்தேன். என் அறியாமையைக் கண்டு சினந்த இறைவன் என்னை மண்ணில் பிறக்கும்படி சபித்தார். நான் கெஞ்சி மன்னிக்கும்படி கேட்டதில் இறைவன் தன் இதயத் தாமரையில் உதிக்கும் தேவலன் வரவால் சாபம் தீரும் என்று அருளினார். நானோ ஆமோத நகரத்து மன்னன் பத்திரபாகுவின் அரசி சிந்துமதியின் வயிற்றில் உதித்தேன். என் மனைவி சித்ர சேனை காசிராசன் மகளாக களாவதி என்ற பெயரோடு பிறந்தாள். நான் களாவதியை மணந்துகொண்டு நகரத்து அரசனாக ஆட்சி புரிந்து வந்தேன். முனிவனே நீ இப்போது வந்து காட்சியை அளித்த நாள் என் சாபம் ஒழிந்தது. நானும் என் மனைவியும் எங்கள் உலகம் செல்லுகிறோம் என்று கூறி இருவரும் தேவ உருவம் பெற்று விமானம் ஏறி மறைந்தனர். தேவலன் ஆச்சரியப்பட்டு அவ்விருவருடைய தூல தேகத்திற்கு உத்திர கிரியைகளைச் செய்துவிட்டு ஆமோத நகரத்திற்கு அரசனாக அரியாசனம் அமர்ந்து நீதியுடன் ஆட்சி செய்தான்.

கபிஞ்சலன் சாபம் கலைந்தது

அமோத நகரத்தில் முடி சூட்டிக்கொண்டு ஆட்சி புரிந்த தேவலனுக்கு சுபுத்திமான், காரியத்தக்கன், நீதிவந்தன், தீர்க்கதரிசனன் என்ற நான்கு அமைச்சர்கள் இருந்து ஆலோசனை சொல்லி வந்தார்கள். ஒரு நாள் முனி அரசன் அவர்களை நோக்கி பெருமான் தன்னை ஆடைகளை உண்டாக்கி வழங்கும் படி ஆணையிட்டதாகவும் அதற்காக பல ஆயுதங்கள் வேண்டி இருப்பதால் அவைகளைப் பெற சுபிச்சுவ வியாபகன் என்றவனிடம் செல்ல வேண்டும்

என்றும் கூறி அமைச்சர்களை ஆளும்படி நியமித்து விட்டு வில் அம்பு முதலியவர்களை ஏந்திக் கொண்டு தனியே வடமலைக்குச் சென்றான்.

இரவில் கார்கேய முனிவரது பன்னசாலையில் தங்கி விட்டு மறுநாள் ஒரு பெரிய அடவியில் புகுந்து சென்றான். அதில் மிகக் கொடிய விலங்குகள் இருந்தன. தேவலன் சிறிதும் அஞ்சாமல் செல்லும் போது கண் எதிரே பெரிய ஒரு சிங்கம் எதிர்ப்பட்டது. அது தேவலனை விழுங்க வந்த போது தேவலன் அதன் மீது கூரிய அம்புகளை எய்து அதனைக் கொன்றான். சிங்கம் இறந்து விழவும் அதிலிருந்து திவ்ய ஒளியுடன் ஒரு புருஷன் விமானத்தில் ஏறிச் சென்றான். ஆச்சரியப்பட்டு தேவலன் அவன் வரலாற்றைக் கேட்க அவன் அடியிற் கண்டபடி உரைத்தான். ''முனி அரசனே நான் அழகாபுரி அரசனான குபேரனுடைய பிரியம் உள்ள கந்தர்வன். என் பெயர் கபிஞ்சலன். நான் ஒரு நாள் வேட்டையாடச் சென்றேன்.

பல விலங்குகளை அடித்துக் கொன்றேன். அப்போது ஒரு அழகிய பெண் மான் ஓடிற்று. அதனைத் துரத்திக் கொண்டு சென்று அதன் மீது ஒரு அம்பை எய்தினேன். அம்மான் அந்த அம்பு பட்ட ரணத்தோடு ஓடி ஒரு பன்னசாலையில் புகுந்தது. அது கௌதம முனிவரது ஆசிரமம். அம்முனிவர் என் செயலைக் கண்டு சினந்து தனது ஆசிரமத்து மானை அம்பு எய்து துன்பப்படுத்தியதற்கு என்னைச் சபித்து ஒரு கொடிய சிங்கமாகும்படி கூறினார். நான் மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ள தேவல முனிவர் தோன்றும்போது சாப விமோசனமாகும் என்று உரைத்தார். நானும் இதுகாறும் கொடிய சிங்கமாக அலைந்தேன். இன்று தங்களால் சாப விமோசனம் பெற்றேன்'' என்று கூறி வணங்கிவிட்டுச் சென்றான். மேலும் இந்த வனத்திற்கு மூன்று யோசனை தொலைவில் வால்சல்லிய முனிவர் ஆசிரமம் இருக்கிறது. அங்கு சென்று அம்முனிவரை வணங்கிவிட்டுச் செல்லும்படி சொல்லிவிட்டு மேல் உலகத்திற்குச் சென்றான்.

உக்கிரதறுவன் வதை.

பிறகு தேவல முனிவன் நெடுந்தொலைவு கடந்து அழகிய கங்கைக் கரையை அடைந்தான். அந்த நதியில் நீராடி விட்டு 3 நாள் தங்கி இறைவனைப் பணிந்து கொண்டு அழகிய சோலையில் புகுந்தான். அங்கு ஒரு அரிய பன்னசாலையில் வால்சல்லிய முனிவர் சீடர் கூட்டத்துடன் தவம் புரிந்து கொண்டிருந்தார். அங்கே தேவலன் சென்று முனிவரை வணங்கி செய்திகளைக் கூறும்படி விண்ணப்பித்தான். முனிவர் அடுத்த வனத்தில் ஒரு பெரிய குகையில் ஒரு அரக்கன் இருப்பதாகவும், அவன் கணக்கற்ற கொலைகள் புரிந்து மக்களைத் துன்புறுத்துவதாகவும் கூறி அவனை ஒழித்துத் தரும்படி வேண்டினார். அது கேட்ட தேவலன் ஆயுதபாணி ஆகி அந்த வனத்திற்குச் செல்ல அங்கு ஒரு பயங்கரமான குகைக்கு எதிரே ஆயிரக்கணக்கில் கிடந்த உடல்கள் கண்டு துயரம் அடைந்தான். தன் வில்லை நாண் ஏற்றி ஒலிக்கச் செய்தான். அது கேட்ட அரக்கன் வெளியே வந்து கடும்போர் புரிந்தான்.

தேவலன் அவனோடு நெடுநேரம் போர் செய்து அவனை வதைத்துச் சென்றான். அரக்கன் நிலத்தில் சாயவும் ஒரு ஒளி பொருந்திய விமானத்தில் ஒரு புருஷன் வானில் சென்றான். விம்மிதம் ஆச்சரியம் அடைந்த தேவலன் அவனை யார் என்று வினாவிய போது, அவன் கூறலானான் ''முனிவனே கேட்பாயாக, நான் இஷ்வாகு வம்சத்தில் தோன்றிய விசால பூபதி பெற்ற உக்கிரதறுவன் என்ற அரசகுமாரன். நான் விசாலபுரியை ஆண்டு வந்தேன். அப்போது விகடன் என்ற ஒரு அரக்கன் என் குடிகளை வருத்திக் கொண்டு இருந்தான். நான் என் படைகளுடன் சென்று அவனைக் கொன்றேன். அவன் தமையன் கற்கடகன் அஞ்சி வஞ்சத்தால் பழிவாங்க நினைத்தான். மனித உருவில் சமையலாளாக என்னிடம் சேர்ந்தான்.

நானும் அந்தப் பணியில் அவனை அமர்த்தினேன். அப்போது துர்வாச முனிவர் அரண்மனைக்கு எழுந்தருளினார். அப்போது என் சமையலாள் ஒரு மனிதனைக் கொன்று அவன் உடலைச் சமைத்து முனிவருக்குப் படைத்தான். முனிவர் அதனை அறிந்து கண்கள் நெருப்புப் பொறி பறக்கக் கோபித்து, மானிட மாமிசத்தைப் படைத்த பெருங்குற்றத் -திற்காக என்னை அரக்கனாகும்படி சபித்தார். நான் பொறுத்தருளும்படி கேட்க தேவல முனிவன் தோன்றும் போது சாப விமோசனம் ஆகும் என்று அருளிச் சென்றார்.

நானும் இதுவரை அசுரனாகி அளவற்ற கொடுந்தொழில் -களைப் புரிந்து வந்தேன். இன்று எனக்கு சாப விமோசனம் ஆயிற்று என்று கூறி, நன்றி செய்து துதித்துவிட்டு தேவலோகம் சென்றான். தேவலனும் வால்சல்லிய ஆசிரமம் சென்று அசுரனைக் கொன்ற செய்தி கூறி அவ்விடமிருந்து மேலும் சென்றான்.

கலைகள் உண்டாக்கியது

வால்சல்லியர் ஆசிரமத்தை விட்டு வடக்கே வெகுதூரம் சென்று மேருமலையை அடைந்தான். அங்கே தேவதச்ச -னுடைய அழகிய கோயிலைக் கண்டு உள்ளே சென்றான். அங்கே இருந்த விசுவ வியாபாகன் என்ற தேவதச்சனைக் கண்டு தான் கருவிகள் வாங்க வந்ததாக அறிவித்தான். அவனும் கூடிய விரைவில் எல்லா ஆயுதங்களையும் உண்டாக்கி தேவலனுக்குத் தந்தான். அவைகள் பட மரங்கள், பலகைகள், தோற்கேடகங்கள், பண்ணையங்கள், தண்டங்கள், நாடாக்கள், கிரிகைகள், திருவட்டம், விடுவாய் முதலியன.

மேலும் ஒரு அரிய உடைவாளையும் கொடுத்தரு -ளினான். அவ்வாறு கொடுத்து படைமரம், பலகை, கண்டம், பண்ணை முதலியவைகள் நினைத்தவாறு குறுகியும் நீண்டும் வரும் திருவட்டமும், கிரிகையும் நாடாவும் அவைகளைப் போலவே வேலை செய்யும் என்றும் சொல்லி எட்டு

பானங்களையும் ஒரு வாளையும் வழங்கினான். தேவலன் அவைகளைப் பெற்றுக்கொண்டு நன்றி செலுத்திவிட்டு ஆமோத நகரத்தை அடைந்தான். அங்கே தொழிலுக்கு வேண்டிய படங்களும், கட்டளைக் கயிறுகளும், மற்ற சிறு கருவிகளையும் தானே செய்து தன் தொழிலைச் செய்யத் தொடங்கினான்.

தொழிலைச் செய்வதற்கு முந்தி தன் குலதெய்வமாகிய சௌடாம்பிகையைத் துதித்தான். அம்பிகையும் மகிழ்ந்து திருவருள் செய்து வாழ்த்தினாள். தன் கையில் தரித்திருந்த பொன் வளையலைத் தந்தாள். மகனே இப்பொன் வளையை அணிவாய் அப்போது நீ நினைத்த வண்ணம் ஆடைகள் உண்டாகும். தேவலனும் வளையலை அணிந்து சிவபெருமானைத் தியானித்து நெய்தல் தொழிலில் ஈடுபட்டான். அவ்வாறு தேவலன் உண்டாக்கிய ஆடையின் பெயர் நேத்திர பந்தர், அமிர்தசந்தர பந்தர், அன்ன பந்தர், அன்னப்புஞ்சகர் மற்றும் பலவகை தாராவளிகள், மேகாவளிகள் என்பன.

தேவர்களுக்குக் கலைகள் வழங்கியது

தேவலன் சகல விதமான உயர்ந்த ஆடைகளை உண்டாக்கியதும் அவைகளை ஏந்திக் கொண்டு முதலில் தேவர்களுக்கு அவைகளை வழங்குவதற்காக, அவரவர் உலகுகளுக்குச் சென்றான். முதலில் வைகுண்டம் சென்று திருமாலுக்குப் பொன்னாடையும், சீதேவி பூதேவிகளுக்கு வெண்பட்டு, செம்பட்டு ஆடைகளை வழங்க திருமால் மகிழ்ந்து மணி அணிகள் வாகனங்கள் முதலியவைகளை வெகுமதியாக அளித்தார். பிறகு சத்தியலோகம் சென்று, நான்முகனுக்குச் செம்மையான ஆடை, கலைமகளுக்கு வெண்துகில் சாவித்திரிக்கு பசும் ஆடை, காயத்ரிக்குப் பொன்னாடை தந்தான்.

நான்முகன் மகிழ்ந்து உரை சொல்ல, தேவலன் நான்முகனைத் துதித்து, திருமால் தந்த நூல் தீர்ந்த பிறகு

நூலுக்கு யாது செய்வது என்று வினாவ, நான்முகன் திருமாலின் உந்திக் கமலத்தில் இருந்து மானி, அபிமானி என்ற இரண்டு பெண்கள் உதித்திருக்கிறார்கள். அவர்களை உலகிற்கு அனுப்பி பருத்திச் செடிகளாக முளைக்கச் செய்து நூலுக்கு வகை செய்கிறேன் என்று வரம் அளித்தார். அவ்வரத்தையும் பெற்றுக் கொண்டு தேவலன் தேவலோகம் சென்றான். அங்கே இந்திரன், இந்திராணி, சயந்தன், வசுக்கள், சூரியர்கள், சந்திரர்கள் மற்றும் உள்ள எல்லாத் தேவ வர்க்கங்களுக்கும் அவரவர்களுக்குத் தக்க ஆடைகளை வழங்கி, பிறகு அக்னி, எமன், வருணன், குபேரன், ராகு, கேது, ஈசானன் முதலிய திக்குப் பாலகர்களுக்கும் ஆடைகளை வழங்கி தக்க பரிசுப் பொருட்களைப் பெற்று நில உலகத்திற்குத் திரும்பினான்.

மேலும் சுற்றும் உள்ள எட்டு குல பருவதங்களுக்கும் சென்று அங்கு வசிக்கும் சகல வாசிகளுக்கும் ஆடைகளை வழங்கினான். எல்லாத் தேவராசிகளிடமிருந்தும் கணக்கற்ற பரிசுகளையும், ஆயுதங்களையும், ஆபரணங்களையும் பெற்றுக்கொண்டு அவர்கள் நன்றி செலுத்த மீண்டும் திரும்பினான். இவ்வாறு தேவர்களுடைய அங்கங்களுக்கு ஆடைகளால் அலங்கிருதம் செய்ததால் தேவலனுக்குத் தேவாங்கன் என்ற சிறப்புப் பெயரும் வரலாயிற்று.

மத்திய பாதாளங்களுக்குக் கலை வழங்கியது

அதன் பிறகு தேவல முனிவன் நிலவுலகத்திற்கு வந்து நாவலந் தீவில் ஆண்டுகொண்டிருந்த பிருது சக்கரவர்த்திக்கும், அவனுடைய குடிகளுக்கும் கலைகளை வழங்கிப் பரிசுகள் பெற்றான். பிறகு பிலச்சத் தீவுக்குச் சென்று சூரசேன மன்னனுக்குக் கலைகளை வழங்கி, குசத்தீவுக்குச் சென்று குஷியனுக்குக் கலைகளை வழங்கியும், கிரவுஞ்சத் தீவுக்குச் சென்று ஹேமாட்சனுக்கு வழங்கியும், சாகத்தீவுக்குச் சென்று அபிராமனுக்கு வழங்கியும், சால்மறைத் தீவுக்குச் சென்று சாரிகோத்திரனுக்கு வழங்கியும், புஷ்கலைத் தீவுக்குச் சென்று பானுமந்தனுக்கு வழங்கியும், அவர்களிடமிருந்து கணக்கற்ற வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டு நாவலந் தீவிற்கு மீண்டும்

வந்தான். அங்கே அங்க வங்கங்களாதி 56 நாட்டு அரசர்களுக்கும், குடிகளுக்கும் ஆடைகளை வழங்கினான்.

எல்லோரிடமும் பெற்ற வெகுமதிகளை ஆமோத பட்டணத்திற்கு அனுப்பிவிட்டு தான் பாதாள லோகத்திற்குச் சென்றான். அங்கே, அரசனாகிய வாசுகியிடம் நானா விதமான கலைகளைக் கொடுத்தும் மற்ற நாகராஜர்களுக்கும் கலைகளை வழங்கி அவர்களால் அபரிமிதமான பரிசுகளைப் பெற்றுக்கொண்டு திரும்பி, நிலவுலகத்திற்கு வந்து ஆமோத நகரம் சேர்ந்தான். இவ்விதமாக தேவல மகராஜன் மூன்றுலோக வாசிகளுக்கும் கலை தானம் செய்து மிக மகிழ்ச்சியுடன் தனது நகரத்தில் அமர்ந்தான்.

இடபக் கொடியைப் பெற்றது.

தேவல மகாராஜன் விலை மதிக்க முடியாத கலைகளை எடுத்துக்கொண்டு பரமசிவனைப் பார்ப்பதற்காகக் கைலாயத்திற்குச் சென்றான். அங்கே கம்பீரமான மணிமண்டபங்களைக் கண்டு வியப்படைந்து அங்கிருந்த தேவர்கள், முனிவர்கள், சித்த வித்யாதரர் முதலான சகல தேவகணங்களும் இறைவனைக் காண வந்து காத்துக் கொண்டிருந்ததைக் கண்டான். அப்போது தேவலன் நிலத்தில் படிந்து வணங்கி இறைவனைப் பல துதிகள் கூறிப் புகழ்ந்தான். அது கண்டு மகிழ்ந்து இறைவன் கடாட்சம் அருள தேவலன் தான் கொண்டுவந்த திவ்ய ஆடைகளை இறைவன் முதலாகிய எல்லோருக்கும் வணங்கினான்.

பிறகு தன் குலதேவதையாகிய சௌடாம்பிகையை வணங்கி தாயே அடியேன் கொண்டு வந்த ஆடைகளை அணிந்தருள வேண்டும் என்று விண்ணப்பித்தான். அப்போது சௌடாம்பிகை மகிழ்ச்சி எய்தி தேவலன் தந்த உடைகளை ஏற்றுக்கொண்டு அணிந்து கொண்டாள். இவ்விதமாய்க் கலை தானம் செய்த பிறகு, சிவபெருமான் தேவலனைப் பார்த்து உன் செயலுக்கு மெச்சினேன். உனக்கு நந்தியம்பெருமான் திருவுருவம் அமைத்த கொடி தருகிறேன்.

இத் திவ்யக்கொடி உன்னிடம் இருக்கும் மட்டும் உனக்கு அச்சமில்லை என்று வாக்களித்து அக்கொடியைக் கொடுத்தார். தேவலனும் பெருமானைச் சேவித்துவிட்டு நன்றி பாராட்டிக் கொண்டு ஆமோதபட்டணம் போய்ச் சேர்ந்தான்.

அரம்பை சாபம்

தேவலராஜன் ஆமோத நகரத்திற்குச் செல்லும் வழியில் ஒரு அழகிய மலர்ச்சோலையிலே ஒரு தாமரைத் தடாகத்தைக் கண்டான். அங்கே அரம்பை காம விகாரம் கொண்டு எதிரே தோன்றினாள். முன்னர் கைலாயங்கிரியில் தேவலனைப் பார்த்தது முதல் கொண்டு அவன் பெயரில் அடக்க முடியாத மோகம் கொண்டு, அவனைப் பற்றிக் கொள்ளும் வண்ணம் இங்கே தோன்றினாள். காம விகாரத்தினால் சொல்வது இன்னதென்று தெரியாமல் சகிக்கமுடியாத சொற்களைச் சொன்னாள். தேவலனோ அவளுடைய விருப்பத்தை மறுத்து நல்ல நீதிமொழிகளை அவளுக்குப் புகட்டினான். அவளோ அவைகளைக் கேட்காதவளாய் மிகவும் வருந்திச் சபித்தாள்.

நீ என்னுடைய கோரிக்கைக்கு இணங்காதபடியால் உன்னுடைய பகைவரிடம் அகப்பட்டு, அவர்களால் துன்பமடைவாய் என்று சபித்துவிட்டு விண்ணுலகம் சென்றாள். தேவல முனிவனோ ஒரு கணப்பொழுது சிந்தையில் ஆழ்ந்திருந்து, எல்லாம் பெருமான் செயல் என்று சொல்லி அறிவு தெளிந்து விரைவாக ஆமோத நகரம் அடைந்தான்.

தேவதத்தை திருமணம்

தேவலனின் திருமணத்தைக் கருதி இறைவன் ஏழு முனிவர்களையும் திருவுள்ளத்தில் நினைத்தார். உடனே ஏழு பேரும் வந்து அடிபணிந்தார்கள். அவர்களை நோக்கி இறைவன் சூரியனிடம் சென்று அவனுடைய தங்கை தேவதத்தையைத் தேவலனுக்குத் திருமணம் செய்விக்க வேண்டி ஒரு நல்ல முகூர்த்தம் பார்க்கும்படி கேட்கச்

சொன்னார். முனிவர்களும் அதனைச் சூரியனிடம் சொல்ல, சூரியன் நான்முகனிடம் விண்ணப்பிக்க, நான்முகன் வைகாசித் திங்கள் பூர்வபட்சம் சப்தமி நாள் புதன்கிழமை அன்று 6 நாழிகைக்கு மேல் நல்ல நாள் என்று குறித்துக் கொடுக்க அதனை இறைவனிடம் சமர்ப்பித்தார்கள்.

சூரியன் அந்நாளுக்குள் திருமண மண்டபம் அழகாகவும் தக்கதாகவும் நியமிக்கும்படி விஸ்வகர்மனுக்கு ஆணையிட அவ்வாறே அமைக்கப்பட்டது. தேவர்கள் மக்கள் எல்லோருக்கும் நிருபங்கள் அனுப்பப்பட்டன. இறைவன், இறைவியும் முதற்கொண்டு தேவர்கள், அரசர்கள் முதலியோரும் திருமணத்திற்கு வந்தார்கள். தேவலன் சூரிய உலகிற்குச் சென்றான். மணமக்களுக்குச் சகல அலங்காரங்களும் செய்யப்பட்டன. சகல வாத்திய கோஷங்களுக்கிடையே வேதங்கள் ஒலிக்க தேவதத்தைக்குத் தேவலன் மாங்கலியநாணைச் சூட்டினான். எல்லோரும் வாழ்த்தினார்கள். திருமணம் முடிந்தவுடன் தேவதத்தை சமேத தேவலன் ஆமோத நகர் அடைந்து இன்பத்துடன் அரசாட்சி செய்தான். (தெலுங்கு நூலில் வைசாக சுத்த பஞ்சமி நாளாம். வடமொழியாகி அதேதான்).

புதல்வர்ப் பேறு

தேவல மன்னன் மிகச் சிறப்புடன் அரசாட்சி செய்யத் தொடங்கினான். 32 அறங்களும் நாட்டில் திகழ்ந்தன. நூல் முறையைத் தழுவி ஆட்சி நடைபெறவே நாட்டில் எங்கும் நீதியும் நன்மையும் நடைபெற்றது. இப்படி இருக்க, தேவதத்தை வயிறு வாய்க்கப்பெற்று நல்ல முகூர்த்தத்தில் மூன்று புதல்வர்களைப் பெற்றாள். அவர்களைக் கண்டு மன்னனும் தேவியும் மகிழ்ந்தார்கள். அவர்களுக்கு திவ்யாங்கன், விமலாங்கன், தவளாங்கன் என்று நாமங்கள் இடப்பட்டன. குமாரர்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் கொண்டு வளர்ந்துவந்தார்கள். எல்லாச் சடங்குகளும் செய்யப் பெற்றார்கள். உபநயனமும் கல்வியும்

தரப்பட்டது. தக்க வயது வந்தவுடன் சூரியனின் புதல்விகள் அவர்களுக்குத் திருமணம் செய்து தரப்பட்டனர்.

திவ்யாங்கனுக்கு பிரமையும், விமலாங்கனுக்கு பத்மாக்ஷியும், தவளாங்கனுக்கு சபலாக்ஷியும் மணம் செய்யப்பட்டனர். பிறகு திவ்யாங்கனுக்கு முடிசூட்டும் செய்யப்பட்டது. அவன் செங்கோல் செலுத்தினான். அனந்தன் மகள் சந்திர சேனைக்குச் சுதர்மன் என்ற மகன் பிறந்தான். அப்போது குசத்தீவின் அரசன் சூரசேனன் ஆமோத நகரின் மீது படையெடுத்தான். அதுகண்டு தேவலன் போர் செய்து அவனைக் கொன்று அவனது அரசை சுதர்மனுக்குத் தந்தான். சுதர்மன் புட்கலையை மணந்து மகிழ்ச்சியுடனே செங்கோல் நடாத்தினான்.

நிருதர் போருக்கு முயலல்

தேவலன் தேவர், மக்கள், நாகர் முதலியவருக்கு கலைகள் வழங்கியது உணர்ந்த அசுரர்கள் தங்களுக்குக் கொடாததை முன்னிட்டு சினமும் நாணமும் உற்றார்கள். அவர்கள் தங்கள் தலைவனான வச்சிரதந்தனிடம் முறையிட்டார்கள். அவனும் தன் தம்பிமார்கள் புலிமுகன், சர்ப்பநாவன் என்றவர்களிடம் ஆலோசனை செய்தான். தேவர்களே இந்த அவமானத்திற்குக் காரணம் ஆகையால், அவர்களுடன் போர் புரிய வேண்டும் என்று ஆலோசனை நடந்தது. முன்னாளில் பலமுறை இந்திரனுக்காகத் திருமால் வந்து அசுரர்களைத் தோற்கடித்ததை முன்னிட்டு தற்போது யாது செய்வதென்று யோசித்தார்கள்.

முடிவில் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்வதென்று தீர்மானித்து அவ்வாறே கடுந்தவம் செய்தார்கள். அதற்கு பெருமான் வியந்து வரம் கேட்கும்படி கூறினார். அசுரர்கள் எப்போதும் இருளிலே இருக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதற்குப் பெருமான் ஒத்துக் கொள்ளவில்லை. அடுத்தபடியாக ஒரு ஆண்டாவது இருட்டு வேண்டுமென்று கேட்க அதனைச் சிவபெருமான் அருளினார். உடனே எங்கும் இருள் அடர்ந்தது.

எவ்விடத்திலும் இருந்த அசுரர் தலைவன் தன் குலத்தார்களை எல்லாம் ஒருங்குகூடும்படி ஆணையிட்டான். அரக்கர்கள் எல்லாம் வீர மயேந்திரபுரத்தில் ஆயுதபாணிகளாக ஒன்று கூடினார்கள். இவ்வாறு போர்க்கோலம் எழும்பியது.

தேவலன் அமர்

அரக்கர்களின் தலைவன் வச்சிரதந்தன் போர்க்கோலம் கொண்டு ஒரு தேரின் மேல் ஏறினான். அவன் உடன் பிறந்தார்கள் ஆகிய புலிமுகனும், சர்ப்பநாவனும் மைந்தர்களாகிய சூரிய கோபனும், அக்னி கோபனும், மருமகர்களாகிய புகைக் கண்ணனும், கடகநாதனும் மற்றுமுள்ள அரக்கர் தலைவர்களும் தேரேறினார்கள். கடல் போல அரக்கர் வீரர்களும் ஒன்று கூடினார்கள். இப்பெருஞ்சேனை இந்திரலோகம் சென்று அமராவதிப் பட்டினத்தைப் புடை சூழ்ந்தது. அது கண்ட தேவேந்திரன் தன்னுடைய சேனைகளையும் திரட்டி வந்து எதிர்த்தான். பெரும் போர் நடந்தது. அரக்கர்களுடைய போருக்குப் புறங்கொடுத்து தேவர்கள் ஓடினார்கள். அரக்கர்கள் வென்றோம் என்ற மகிழ்ச்சியுடன் வீரமகேந்திரம் அடைந்தார்கள். தோற்றுப்போன இந்திரன் கைலாயத்திற்குச் சென்று இறைவனிடம் முறையிட்டான். இறைவன் தேவலனை நினைக்க தேவலனும் ஒரு நொடியில் கைலாயம் வந்து சேர்ந்தான்.

தேவலனைப் பார்த்து இறைவன் இந்திரன் உதவிக்காகச் சென்று அசுரர்களை வெல்லும்படியாக ஆணையிட்டார். தேவலனும் இறைவன் கட்டளையைத் தலைமேற்கொண்டு வணங்கி ஆமோத நகரமடைந்தான். உடனே செய்தி அனுப்பி போர் வீரர்களை அழைத்து, பெருஞ்சேனை திரட்டினான். அச்சேனையுடன் சென்று இந்திரனுக்காக அரக்கர்களோடு போர்புரிந்து அரக்கர்களைத் தோற்கடித்தான். அரக்கர்களும் ஓடினார்கள்.

வியாக்கரமுகத்தன் வதை

அரக்கர்கள் தோல்வி அடைந்து வீர மகேந்திரபுரி சேர்ந்து துயரத்தோடு இருந்தார்கள். அப்போது வச்சிரதந்தனுடைய தம்பி வியாக்கரமுகத்தன் அண்ணனை விளித்து இந்த வெட்கக்கேட்டை விலக்க வேண்டும். இந்திரனுக்கு நாம் எப்போதும் தாழக்கூடாது. அவனுக்கு உதவியாக வந்த தேவல முனிவனை வெல்ல வேண்டும். உத்தரவு தாருங்கள் என்று கேட்டான். வச்சிரதந்தனும் மகிழ்ந்து தம்பிக்கு ஊக்கம் கொடுத்து பெருஞ்சேனையோடு போருக்குச் செல்லும்படி ஏவினான். வியாக்கரமுகத்தன் போருக்குச் சென்று பயங்கரமாகப் போர் புரிந்தான். தேவலனும் சிறிதும் சலிக்காமல் யுத்தம் செய்தான். இருபுறமும் கணக்கற்ற அரிய பாணங்களை எய்தார்கள். வெகுநேரம் கொடிய போர் நடந்தது. இறுதியில் தேவலன் வியாக்கர முகத்தனுடைய தேரை அழித்து அவன் தலையையும் கீழே விழும்படி அம்பு எய்தி, உயிரை வாங்கினான். வியாக்கரமுகத்தனுடைய பெரிய உடல் நிலத்தில் வீழவும் இந்திரன் தேவலனை மார்போடு கட்டித்தழுவி வணங்கினான். அரக்கர்கள் தோற்று ஓடிவிட்டார்கள்.

விடைக்கொடி வெற்றி தருதல்

தோல்வியடைந்த அரக்கர்கள் மகேந்திரபுரிக்கு ஓடிப்போய் வச்சிரதந்தனிடம் அவன் தம்பி வியாக்கிரமுகத்தன் வதைபட்டதைப் பற்றிக் கூறினார்கள். வச்சிரதந்தன் அது கேட்டு துடிதுடித்து சினம் பொங்க தேவலனை இப்பொழுதே கொன்று வருவேன் என்று வீரம் கூறிப் புறப்பட்டான். கணக்கற்ற சேனைகளும், சேனைத் தலைவர்களும் பின் சென்றார்கள். ஹேமகூடத்து மலைச் சாரலில் கொடிய போர் நடந்தது. தேவேந்திரனுக்கு உதவியாய் நின்ற தேவலன் எவரும் வியக்கும்படி போர் புரிந்தான். இருபுறத்திலும் கணக்கற்ற பேர் இறந்துபட்டார்கள். வச்சிரதந்தன் தேவலனைப் பார்த்து அட்டகாசம் செய்தான். ஆனால் தேவலனோ சிறிதும்

மனம் அழியாமல் கொடிய போர் புரிந்து இருமுறை அரக்கனுடைய தேரை அழித்தான். போர் மீண்டும் பெருகிற்று. அதைக் கண்ட தேவலன் விடைக்கொடியைப் பூசித்து அதனை ஏவினான். அக்கொடியிலிருந்து கணக்கற்ற நந்திகள் தோன்றி நிருதர்களை அழித்தன. விடைக்கொடியின் வல்லமையைக் கண்டு வச்சிரதந்தன் நடுங்கி போர்க்களத்தை விட்டு ஓடினான். இந்திரன் தேவலனைப் புகழ்ந்து நன்றி செலுத்திவிட்டு அமராவதி அடைந்தான். தேவலனும் தன் சேனைகளை நடத்திக் கொண்டு ஆமோத நகரம் அடைந்தான்.

மன்னவன் விடைக்கொடியைப் பறிகொடுத்துத் தோற்றல்

போரில் தோற்று ஓடிய வச்சிரதந்தன் சரீரம் வாடி போஜனமும், நித்திரையும் கொள்ளாமல் மனம் உருகினான். தன் மக்கள், தம்பியர், மருமக்கள் முதலியோருடைய மனைவியர்கள் திருநாண் இழந்ததை எண்ணி மனம் உருகினான். இவ்வாறு வச்சிரதந்தன் துன்பப்பட்டுக் கொண்டிருந்தபோது அவனுடைய இளமை நண்பனான வித்தையுத்தேசன் என்ற ஒரு மாயாவி அவனிடம் வந்து தேர்தல் கூறினான். அப்போது வச்சிரதந்தன் மிக துக்கத்தோடு இவ்வாறு கூறினான், நண்பனே தேவேந்திரன் மீது படையெடுத்துச் சென்றோம் அவனை வென்றோம்.

ஆனால், அவனுக்குத் துணை நின்று தேவலன் என்றொரு அரசன் வந்து போர் புரிந்தான். அவனிடம் விடைக்கொடி ஒன்று உண்டு. அது மிகவும் வல்லமை உடையது. அதனின்று கணக்கற்ற நந்திகள் தோன்றி எங்களை எல்லாம் அழித்தன. அக்கொடியை வஞ்சகத்தால் தான் அபகரிக்க முடியும். அது என் கைவசமானால் எனக்கு வெற்றி கிடைக்கும். ஆகவே அதனைக் கொண்டு வருவாயாக என்று சொல்லி அவனை ஏவினான். உடனே வித்தையுத்தேசன் ஒரு தூதனைப் போல் வேடம் கொண்டு தேவலனிடம் சென்றான். தேவலனைப் பார்த்து ஐயனே நீங்கள் வந்த பிறகு மீண்டும் வச்சிரதந்தன் அமராவதியின் மீது தண்டெடுத்து

வந்திருக்கிறான். நான் தேவேந்திரனுடைய தூதன். என்னை உன்னிடம் அனுப்பி விடைக்கொடியைப் பெற்று வரும்படி கூறியிருக்கிறான் என்றார். அதை நம்பிய தேவலனும் விடைக்கொடியைக் கொடுத்து அது யாரிடம் உண்டோ அவருக்கு வெற்றி கிடைக்கும் என்று கூறி மகிழ்ச்சியுடன் அனுப்பினான்.

வித்தையுத்தேசன் உடனே விரைவாகச் சென்று வச்சிர தந்தனிடம் விடைக்கொடியைக் கொடுத்தான். வச்சிரதந்தன் அக்கொடியை ஏந்திக் கொண்டு நால்வகைச் சேனைகளுடன் அமராவதியின் பேரில் போருக்குச் சென்றான். தேவேந்திரன் போர் புரிந்தான். ஆனால், சகிக்க முடியவில்லை. தேவலனிடம் தூது அனுப்பினான். நேற்று தினம் தான் விடைக்கொடியைக் கொடுத்திருக்க இன்று ஏன் மீண்டும் தூது வருகிறது என்று கவலைபூண்டு அமராவதி சென்றான். மிக வீரத்தோடு போர் புரிந்தான். ஆனால் நிருதர்களை வெல்ல முடியவில்லை. கொடி எதிரிகள் வசம் போனதை அறிந்தான். வஞ்சனையால் அரக்கர்கள் கொடி கவர்ந்ததையும் அறிந்தான். அரம்பை கொடுத்த சாபம் அப்போது பலித்ததாக எண்ணினான். தேவலனுடைய மனிதப் படை ஓடிவிட்டது. தேவலனோ தேருடன் பிணைக்கப்பட்டான். அரக்கர்கள் தேவலனை வெற்றிமுரசுடன் வீரமகேந்திரபுரிக்குக் கொண்டு சென்றார்கள். தேவேந்திரனும் தளர்ச்சி அடைந்து அமராவதி போய்ச் சேர்ந்தான்.

தேவலன் அக்னிதத்தையை மணத்தல்

இவ்வாறு கட்டுண்ட தேவலனைப் பார்த்து மகிழ்ச்சியும் சிறப்பும் அடைந்த வச்சிரதந்தன் தேவலனைக் கொலை செய்வதால் பயனில்லை. இவனை உபசரித்து நட்புப் பெற்று ஆடைகளை இவன் மூலம் ஆக்கப் பெறுவோம் என்று எண்ணினான். அதன்படி தேவலனுக்கு அங்கே தலைமை தந்து அரக்கர்களும் அவனுக்குப் பணிவிடை செய்யும்படி ஏற்பாடுகள் செய்தான். பின் ஒருநாள் தன் புதல்வி பத்மினியைத் திருமணம் செய்து கொள்ளும்படியும்

வேண்டினான். தேவலனோ தன் ஊழ்வலி எண்ணிச் சோர்வடைந்தான். வச்சிரதந்தன் தேவலனைத் தேற்றி, இப்பெண் அரக்கர் மாது என்று மனம் தளர வேண்டாம். இவள் பெயர் அக்னிதத்தை இவளை வேத விதிப்படி திருமணம் செய்து கொள் என்று ஏவினான். தேவலனும் அதற்கு இணங்க வேண்டி வந்தது. திருமணம் நடந்தது. சிறிது காலத்திற்குப் பிறகு அக்னிதத்தை. கர்ப்பமுற்று சாலன், அலன், பெலன் என்ற மூன்று மக்களைப் பெற்றாள். அவர்கள் சிங்கக் குட்டிகள் போல் வளர்ந்தார்கள். அவர்கள் மூவருக்கும் நெய்யும் தொழிலைக் கற்பித்து வளமுள்ளவர்கள் ஆக்கி அரக்கர்களுக்கும் ஆடைகள் ஆக்கித் தரும் செயலில் ஈடுபடுத்தினான். பிறகு வச்சிரதந்தனிடம் செலவு பெற்றுக் கொண்டு தேவலன் ஆமோத நகரம் அடைந்து நீதி செலுத்தி வந்தான்.

மன்னவன் லிங்க வடிவமாதல்

இப்படி இருக்க, ''வித்யாதாரர்கள் சிவபெருமானிடம் சென்று அஞ்சலி செய்து ஐயனே நாங்கள் அறுபத்து நான்கு கலைகளில் சிலவற்றை அறிவோம். மற்றவற்றையும் அறிய வேண்டும். அவைகளைக் கற்பித்து எங்களைத் தன்னியர்களாக்க வேண்டும்'' என்று வழுத்தினார்கள். சிவபெருமான் அருள் கூர்ந்து அவர்களைப் பார்த்து உங்கள் குலத்தில் உதித்த ஏமவருணன் என்ற வித்யாதரன் மேருவின் சாரலில் தவம் செய்து கொண்டிருக்கிறான். அவனுக்கு ஒரு மகனை அருள் செய்வோம் அம்மகன் பெருங்கீர்த்தியுற்று, உங்களுக்கு வேண்டிய கலைகளை விரித்துச் சொல்லுவான் என்று அருள் செய்தார். வித்யாதாரர்கள் களிப்பெய்தித் தம்முலகம் போய்ச் சேர்ந்தார்கள். சிவபெருமான் தேவலனை நினைக்க தேவலன் ஒரு கணப்பொழுதில் பெருமானிடம் வணங்கி நின்றான். பெருமானும் அவனை விளித்து மேருவின் சாரலில் ஏமவருணன் தவம் செய்கின்றான். அவனுக்கு நீ பிள்ளையாகப் பிறந்து 64 கலைகளையும் வித்தியாதரர்களுக்கு உபதேசிப்பாய் என்றார். தேவலன்

ஆமோத நகரமடைந்து திவ்யாங்கனுக்குப் பட்டம் சூட்டிவிட்டு தன் உடலை லிங்கவடிவம் ஆக்கிவிட்டு மேல்உலகம் சென்றான்.

வித்யாதரன் ஆதல்

சிவபெருமான் அருளிய ஆணைப்படி தேவலன் மேருவின் சாரலில் தவம் செய்து கொண்டிருந்த ஏமவருணனின் முன்னர் குழந்தை வடிவில் தோன்றினான். தம் முன்னர் ஒரு அழகிய குழந்தையைக் கண்ட ஏமவருணன் அது இறைவனின் அன்பளிப்பு என்று உணர்ந்து, தம் மனைவி சந்திரமுகியிடம் கொடுத்தான். அவள் மார்பில் பால்சுரந்த உடனே தன் பிள்ளையாக எடுத்துக் கொண்டு, கமலாட்சன் என்னும் பெயர் தந்து வளர்த்தினார்கள். தக்க வயதில் 64 கலைகளும் கற்று அக்குலத்தரான வித்யாதாரர்களுக்குக் கலைகளைப் பயிற்றுவித்தான்.

வித்யாதாரர்களும் கலைகள் முற்றும் பயின்று கல்விமான்கள் ஆனார்கள். கமலாட்சன் ஒரு நாள் கைலாயத்திற்குச் சென்று யாழை மீட்டி இறைவன் மீது அழகிய தோத்திரங்கள் சொன்னான். இறைவனும் மகிழ்ந்து தினம்தோறும் கமலாட்சனுடைய யாழினைக் கேட்டுக் கொண்டிருந்தார். இப்படி இருக்க கனகமாபுரியல் சுருதிகீர்த்தி என்ற அரசன் ஆட்சி செய்து கொண்டிருக்க கோரன் என்ற அரக்கன் மக்களைத் துன்புறுத்துவதாகவும், அவனோடு போர் புரிந்து வெற்றி அடைவது கடினம் என்றும் சிவபெருமானைத் துதிக்க, சிவபெருமான் கோரனை வெல்லவல்ல ஒரு மாரனை அளிப்பதாக அருளிச்செய்து கமலாட்சனை நினைத்தார். கமலாட்சனும் எதிரே தோன்றி அவனை விளித்து சுருதி கீர்த்திக்கு மகனாய்ப் பிறந்து கோரனை அழிக்கும்படி ஆணை -யிட்டான். அதனைச் சிரமேற்றுக் கொண்டு கமலாட்சனும் தன்நகர் அடைந்தான்.

புட்ப தந்தனாதல்

சிவபெருமானுடைய திருவருளால் சுருதிகீர்த்தி அரசனுக்கு, சோமவதி என்ற மனைவியிடம் கமலாட்சன் ஒரு அழகிய மகனாகப் பிறந்தான். அவனுக்குப் புட்பதந்தன் என்ற பெயர் இடும்படி அசரீரி கூறிற்று. புட்பந்தனும் பாலசூரியனைப் போல் வளர்ந்தான். ஆமோத நகரத்திலிருந்து தேவதத்தை சிந்து அரசன் விருபாட்சன் என்பவனுக்கு அவன் அரசியாகிய கீர்த்திசாலியிடம் பிறந்தாள். அவளும் வெகுசெல்லமாக வளர்ந்தாள். புட்பதந்தனனுக்குத் தேவதத்தையை மணம் செய்து வைத்தார்கள். பிறகு சுருதிகீர்த்தி புட்பதந்தனிடம் கோரன் என்ற அரக்கனுடைய கொடுமைகளை எடுத்துக்கூறி அவனை வதைக்கும்படி அனுப்பினான். புட்பதந்தன் தன் மீது படையெடுத்து வருவதைக் கண்டு கோரன் கொடும்போர் புரிந்தான். அப்போது புட்பதந்தன் நெருப்பு போன்ற கொடிய பாணத்தை விட்டு கோரனுடைய தலை நிலத்தில் விழும்படி அறுத்துத்தள்ளினான். வெற்றியுடன் புட்பதந்தன் கனகமாபுரி அடைந்ததும் சுருதிகீர்த்தி மிகவும் மகிழ்ந்து தன் மகனுக்குப் பட்டம் கட்டிவிட்டு, கானகத்திற்கு தவம் செய்யச் சென்றான். புட்பதந்தன் இராமபிரானைப் போல் செவ்வையாக ஆட்சி புரிந்தான். புட்பதந்தன் சிவபக்தியில் ஈடுபட்டு அருமையான நந்தவனங்களை உண்டாக்கி சிவலிங்க பூஜை செய்து வந்தான்.

சிவராத்திரியின் போது வெகு உருக்கமாக சிவபூஜை செய்த அளவில் சிவபெருமான் இடபாரூடராய்க் காட்சி தந்தார். அப்போது புட்பதந்தன் துதிக்கவும் இறைவன் வேண்டிய வரங்களைத் தருவதாக அருள் செய்ய, தானும் தன் மனைவியும் ஒவ்வொரு நாளும் கைலாயத்திற்குச் சென்று சிவ தரிசனம் செய்து வைக்கும்படி அருள்புரிய வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். அவ்வாறே வரம் தந்து இறைவன் மறைந்தருளினார். அதன்படியே புட்பதந்தன் கயிலாயம் சென்று வழிபட்டு வந்தான். ஒருநாள் கயிலையில் இறைவனும்

இறைவியும் எவரும் கேட்டறியாத கதை சொல்லிக் கொண்டிருந்தனர். புட்பதந்தன் வாயிற்படியில் நின்று அதைக் கேட்டுக்கொண்டிருந்தான். பின்னர் கனகமாபுரம் அடைந்தவுடன் ஏன் இத்தனை நேரம் என்று தேவதத்தை கேட்டாள், அவன் இரகசியக்கதை கேட்டதைக் கூறினான். அவளும் அக்கதையைக் கேட்க விரும்பியதால் அக்கதையைச் சொன்னான். பின்னர் இருவரும் கயிலாயம் போனபோது தேவதத்தை இறைவியைத் துதிக்கையில் தான் கேட்ட கதையைச் சொல்லிவிட்டாள். எவரும் அறியாத கதை உனக்கு எப்படித் தெரிந்தது என்று இறைவி கேட்க, தேவதத்தை தன் கணவன் சொல்லக் கேட்டேன் என்றாள். இறைவி அதனை இறைவனுக்குக் கூற இறைவன் நடந்த வரலாறு தெரிந்து கொண்டு புட்பதந்தனை நோக்கி, நீ செய்த தவறுக்காக வேதாள உருவம் பெறக்கடவாய். உன் மனைவி கழுதையாகக் கடவாள் என்று சபித்தார். புட்பதந்தன் இரங்கி அருளவேண்டும் என்று வேண்டிக்கொள்ள, ‘‘இருவரும் ஒருகாலத்தில் விக்ரமாதித்தனைச் சந்திக்கும்படி நேரும். அப்போது சாபம் நீங்கும்’’ என்று சொல்லி சிவபெருமான் மறைந்தருளினார்.

வேதாளமாதல்

சிவபெருமான் சாபத்தின்படி புட்பதந்தன் வேதாளமாகி பைசாசங்களுக்குத் தலைவனாய் ஒரு கொடிய காட்டில் ஒரு பெரிய ஆலமரத்தில் வசித்து வந்தான். தேவதத்தை கழுதை வடிவு கொண்டு பாடலிபுரத்தில் பகல் முழுவதும்திரிந்து கொண்டு இரவில் சுயவடிவம் பெற்று யாழ்வாசித்துக் கொண்டிருப்பாள். ஒரு காலத்தில் விக்ரமாதித்தன் செங்கோல் செலுத்திக் கொண்டிருக்கையில் அப்போது வன சஞ்சாரமாக பாடாலிபுரம் சேர்ந்தான். அங்கே ஒரு பூஞ்சோலையில் இருக்கையில் இரவில் ஒரு கந்தர்வப் பெண் எலும்பு உருகும்படி யாழ் வாசிப்பதைக் கேட்டான். மிகுந்த வியப்புடனே அப்பெண்ணிடம் சென்று அவள் சாபவரலாற்றை அறிய விரும்பினான். அதற்கு அவள்

தன்பெயர் தேவதத்தை என்றும் தன் கணவன் புட்பதந்தன் என்றும் கூறி தங்களுக்கு வந்த சாபவரலாற்றை அவனிடம் கூறினாள். அவளும் அவ்வரசனையும் பற்றி, யார் என்று வினவ, அவன், தானே விக்ரமாதித்தன் என்றும், அவர்களுடைய சாப விமோசனம் அடைவிக்கும் பொருட்டுத் தான் இருவர்களையும் சேர்த்து வைப்பதாகவும் வாக்களித்தான்.

சாப விமோசனம்

அதன் பிறகு விக்ரமாதித்தன் வேதாளத்தின் உறைவிடம் தேடிச்சென்று ஒரு கொடிய காட்டில் அது ஆலமரத்தில் இருக்கக் கண்டான். விக்ரமாதித்தன் அம்மரத்தில் ஏறி வேதாளத்தைக் கட்டி அதனைச் சுமந்து கொண்டு தேவதத்தை வசிக்கின்ற சோலை நோக்கிச் சென்றான். இவ்வாறு போகையில் வேதாளம் ஒரு கதை சொல்லிற்று. அக்கதைக்கு விக்ரமாதித்தன் விடையளித்தான். இவ்வாறு 25 கதைகள் சொல்லி இறுதியில் முறை தெரியாத கதை என்ற கதையைச் சொல்லி முடிக்கும்போது விக்ரமாதித்தன் தேவதத்தை இருந்த சோலைக்கு வந்து சேர்ந்தான். வேதாளமும் தேவதத்தையைச் சந்திக்கவே அவர்களுக்கு இருந்த கொடியசாபம் நீங்கியது. தங்களுடைய பழைய தெய்வ உருவம் அடைந்தார்கள். விக்ரமாதித்தனுக்கு நன்றி செலுத்தினார்கள். விக்ரமாதித்தன் நினைத்தபோது தான் வந்து உதவுவதாக வரமளித்துவிட்டு, புட்பதந்தனும் தேவதத்தையும் கயிலை சென்று இறைவனை வணங்கிக் கொண்டிருந்தார்கள்.

வரருசி முனிவர்

ஒரு காலத்தில் நில உலகில் யாதோ ஒரு காரணத்தினால் அறம் கெட்டு, மறம் நிறைந்தது. நன்மை தடுமாறித் தீமை பெருகிற்று. தேவர்கள் இறைவன் திருமுன்னர்த் தோன்றி அந்த நிலையைத் தெரியப்படுத்தினார்கள். இறைவன் மனம் மகிழ்ந்து ஆமோத நகரத்தில் கங்காதரன் என்ற அரசனுக்கு ஒரு மைந்தன் பிறப்பான். அவன் நிலைகுலைந்த உலக

வழக்கங்களைத் திருத்திஅமைப்பான் என்று அருளினார். பெருமானை வணங்கிவிட்டு தேவர்கள் சென்றபிறகு புட்பதந்தனை நோக்கி, ‘‘உலகில் நீ போய் தேவலனது 15 ஆவது தலைமுறையில் உள்ள கங்காதரனுக்குப் புதல்வனாக அவதரித்து வேதங்களைத் திருத்தல் செய்து, நீதியை வழங்குவாய்’’ என்றார். தேவதத்தையும் விரத புரத்தில் சுசீலன் என்ற அரசனுக்குப் புதல்வியாய்ப் பிறக்கும்படி அருள்செய்தார். இறைவன் அருள்செய்தபடி புட்பதந்தன் கங்காதரன் மனைவி சுகுனவாணி என்பவளுக்கு மகனாகப் பிறந்தான். பிள்ளைக்கு அசரீரி வாக்குப்படி வரமுனி என்ற பெயரிடப்பட்டது. சடங்குகள் செய்யப்பட்டன.

சகல கலைகளும் தேர்ந்து தேவதத்தையும் சுசீலன் மனைவி குணவதியின் வயிற்றில் பிறந்து அமிர்தசீலி என்ற பெயருடன் வளர்ந்தாள். வயது வந்தவுடன் வரமுனிக்கும் அமிர்தசீலிக்கும் திருமணம் நடந்தது. கங்காதரன் தன்மகனுக்குப் பட்டம் கட்டிவிட்டுத் தவத்திற்குச் சென்றான். அரசகட்டில் ஏறின வரமுனிவன் நான்கு வேதங்களையும் செவ்வைப்படுத்தி, நீதி, ஒழுக்கம், நன்னடை, அறங்கள் முதலியவைகளை எல்லாம் நிலைநிறுத்தினான். வடமொழியில் அளவற்ற ஆகம நூல்களை இயற்றினான். அவனுக்கு வீரருத்திரன் என்ற ஒரு புதல்வன் பிறந்தான். அவனும் நூல்கள் கற்று வயது வந்தபோது கோமலை என்ற பெண்ணைத் திருமணம் செய்தான். பிறகு வீரருத்திரனுக்குப் பட்டம் கட்டிவிட்டு வரமுனியும் அமிர்தசீலையும் கயிலை அடைந்தார்கள்.

வீரருத்திரன் சகர நாட்டை வெகு நீதியுடன் ஆண்டு வந்தான். அவனுக்குச் சுகுணன் என்ற புதல்வன் தோன்றினான். இப்படி இருக்க, சிவபெருமான் கயிலை சென்ற வரமுனியை அழைத்துச் சுகுணனுக்குப் பிள்ளையாகப் பிறந்து உலகத்தில் நீதி செலுத்தும்படி அருள் செய்தார்.

தேவசாலி பிறப்பு

வர முனிவன் சுகுணனுக்கும் சத்தியவதிக்கும் மகனாகத் தோன்றி, தேவசாலி என்ற பெயரோடு வளர்ந்தான். அமிர்தசீலியோ நிடதநாட்டு அரசன் கமலசாதனனுக்கும் சுமுகைக்கும் மகளாகப் பிறந்து, சுகதருணி என்ற பெயருடன் வளர்ந்தாள். வயதுவந்தவுடன் தேவசாலிக்கும் சுகதருணிக்கும் திருமணம் நடந்தது. தேவசாலிக்குப் பட்டம் கட்டிவிட்டுச் சுகுணன் தவத்திற்குச் சென்றான். சகர நாட்டை வெகுபுகழுடன் தேவசாலி ஆண்டான். அவர்களுக்கு சசிசேகரன் என்ற ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு வயது வந்ததும் உத்தமியை மணம் செய்வித்தார்கள். சசிசேகரனுக்கு வாமதேவன் பிறந்தான். அவனுக்கு அமிர்தசாகரன் பிறந்தான். அப்போது நாட்டில் மீண்டும் நீதி தடுமாறியது. அதனை நாரத முனிவர் தெரிவிக்க இறைவன் தேவசாலியை அழைத்து வாமதேவனுக்கு மகனாகத் தோன்றி நீதியை நிலைநிறுத்தும்படி அருள்செய்தார். அதன்படியே தேவசாலி கடைசி அவதாரம் எடுக்கச் சென்றாள்.

தேவதாச பிறப்பு

சிவபெருமான் தேவசாலியைப் பூலோகத்தில் பிறக்கச் சொல்லி அருளிச்செய்த போது, பார்வதி தேவி அவனைப்பார்த்து, ‘‘மகனே உன்னை அரக்கர்கள் சூழ்ந்தபோது நான் அவர்களைக் கொன்று உன்னைப் பாதுகாத்தேன் அல்லவா, உன்னுடைய குலத்தார் என்னைச் சௌடாம்பிகை என்ற பெயருடன் குலதேவதையாக வணங்கினார்கள். அவர்கள் இராமலிங்க சுவாமியையும் வணங்குவார்களாக’’ என்று அருள்செய்தார். அச்சொற்களை சிரசாவகித்து, தேவசாலி உலகத்தில் சகரநாட்டில் ஆமோத நகரத்தில் அரசனுடைய புதல்வனாய்ப் பிறந்து, தேவதாசன் என்ற பெயருடன் வளர்ந்தான். அப்போது தேவதத்தையும் மங்கள நாட்டு அரசனிடம் புதல்வியாகப் பிறந்து வளர்ந்தாள். தக்க காலத்தில் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. பிறகு

ஆமோத நகரத்தில் மிகமகிழ்ச்சியுடன் இருக்கையில் சிவபூசை செய்யும் மக்களுக்குச் சிவதீட்சை கொடுத்தும் குடிகளையெல்லாம் ஈடுபடச் செய்தான். உலகில் சைவ சமயம் பெருகிற்று. நாலாவட்டத்திலும் தேவதாசனுக்கு விரூபாட்சன் என்ற புதல்வன் உதித்தான். அவனும் வெகுபக்தி சீலனாகி பாடல்கள் பாடி அனுட்டானங்கள் செய்து பெரும்புகழ் பெற்றான்.

நாட்டில் எங்கும் சைவசமயமே பெருகி வருதலைக் கண்ட பௌத்தர் அச்சமுற்று தேவதாசனை ஒருமுறை வழிமறித்து, 'உங்கள் சிவன் எங்கு உள்ளான்' என்று கேட்டார்கள். சிவபெருமானோ எங்கும் உள்ளார் என்று தேவதாசன் கூற, இந்த எறும்பில் உள்ளாரா என்று பௌத்தர் கேட்க, எறும்பும் சிவனே என தேவதாசன் கூற, அப்படியானால், இவ்வெறும்பைச் சொல்லச் சொல் என்றார்கள். தேவதாசன் மிக அன்போடு இறைவனைத் தொழவே, அவ்வெறும்பில் சிவ பெருமான் தோன்றி 'மக்களே நானே சிவபெருமான். நான் எந்த இடத்திலும் இருப்பேன். இதைச் சந்தேகிக்க வேண்டிய காரணம் இல்லை' என்று பதில் கூறினார். பௌத்தர்கள் இது வெறும் மாயமந்திர சக்தி. இதனை எவ்வாறு செய்தாய்? இராமலிங்க சுவாமியைப் பேசச்சொல் என்றார்கள். அப்படியே பௌத்தர்களை அழைத்துக்கொண்டு கோயிலுக்குச் சென்று இராமலிங்க சுவாமியை நோக்கி தேவதாசன் காரணம் காட்டும்படி துதிசெய்ய, அந்த மூர்த்தி, ''நானே இறைவன். உலகீர் இதை நம்புவீர்!'' என்று அசரீரியாய்க் கூற, பௌத்தர்கள் நம்பிக்கை கொண்டு சிவசமயத்தில் எழுந்து தேவதாசனால் தீட்சை செய்யப் பெற்றார்கள்.

பின்னரும் பல அற்புதங்களைச் செய்து சைவ சமயத்தைப் பெருக்கினான். அதுகண்டு பொறாமையுற்ற பௌத்தகுரு அரசனிடம் இதனைக் கூறினான். அரசன் பௌத்தன். அவன் மனைவி சைவம். அரசன் இருவரையும் அழைத்து, யார் தான் செய்யும் சோதனையில்

வெல்லுகிறீர்களோ அவர்கள் சமயத்தில் மற்றவர் சேர வேண்டும் என்று சொல்லி ஒரு குடத்தில் பாம்பையிட்டு மூடிவிட்டு இதில் யாது இருக்கிறது என்று அரசன் கேட்டான். பௌத்தன் இதில் பாம்பு இருக்கிறது என்றான். தேவதாசனோ அதில் சிவன் பாம்பை அணிந்து கொண்டிருக்கிறான் என்றான். கட்டு அவிழ்த்துப் பார்க்கையில் சிவபெருமான் உருவம் இருக்க ஆச்சரியமடைந்து எல்லாரும் சைவர்கள் ஆனார்கள். பிறகு தேவதாசன் ஆமோதப் பட்டினம் சென்று அங்கு வந்த மக்களுக்கு சிவதீட்சை தந்து பின் கல்யாணபுரம் சென்று அங்கும் எல்லாரையும் சைவர்களாக்கிச் சிவத்தொண்டு செய்து வந்தான். பின்னர் தன் மகனான விரூபாட்சனுக்கு ஆட்சி அபிடேகம் செய்து குலத்தார்க்கு ஆசாரியராக்கித் தேவதாசன் சிவசாயுச்சியம் அடைந்தான்.

குலப் பெருக்கம்

ஆமோதபட்டினத்தில் அரசாண்டு வந்த தேவதாசனின் குமாரன் விரூபாட்சன் என்கிற கோமகனுக்கு உருத்திரன் என்கிற மகன் பிறந்தான். உருத்திரனுக்கு தக்கவயதும், கல்வியும் வந்த பிறகு அவனுக்குக் குருபீடத்தில் பட்டம் கட்டிவிட்டு விரூபாட்சன் சிவபதம் அடைந்தான். உருத்திரன் சிஷ்ய கோடிகளைப் பரிபாலித்துக் கொண்டும், சகல விதமான ஆடைகளை உண்டாக்கியும், தன் தொழிலை நடத்தி வந்தான். அவனுக்குக் காலசேனன் என்ற ஒரு மகன் பிறந்தான். வயது வந்த பிறகு துர்க்களை என்ற ஒரு கன்னிகையை மணந்தான்.

ஆமோத நகரத்தைப் பரிபாலித்துக்கொண்டு தன் தொழிலையும் செவ்வையாக நடத்திக் கொண்டு வந்தான். ஆனாலும், அவனுக்குப் புதல்வப் பேறு உண்டாகவில்லை பிறகு 700 கன்னிகைகளை மணந்தும் ஒருவரிடமாவது குழந்தை பிறக்கவில்லை. அப்போது சிவ பெருமானைக் குறித்து அகோர தவம் புரிந்தான். அதன் பலனாக 16,000 புத்திரர்கள் பிறந்தார்கள்.அவர்களின் பெயர்கள் ரூபசேனன், சித்திர சேனன், சித்திரச்யனன் முதலியன. அப்புத்திரர்களுக்கு

வேதவிதிப்படி செய்ய வேண்டிய எல்லாச் சடங்குகளும் செய்யப்பட்டன. திருமணங்களும் நடைபெற்றன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ரிஷியின் பெயரால் கோத்திரங்கள் வழங்கப்பெற்றன.

இந்த வகையில் பதினாராயிரம் கோத்திரங்கள் காணப்பட்டன. இப்படி இருக்க காலசேனன் பெரியகுமாரனான ரூபசேனனுக்குக் குருபீடம் தந்து அதில் அமர்த்தினான். ரூபசேனனும் தன் தம்பிமார்களுடன் ஆமோத நகரத்தைப் பரிபாலித்துக் கொண்டு, தன் குலத் தொழிலையும் நடத்தி வந்தான். இப்படி இருக்க பரிடாணம் என்ற நகரத்தில் சக்தி என்ற அரசனுடைய ஆட்சியில் சோமசருமன் என்ற பிராமணன் இருந்தான். அவனுக்கு மக்கட்பேறு இல்லாமல் அவர் ஆலயத்தில் சந்திர மௌலீச்சுரனையே தொழுது வந்தான். தினம்தோறும் நிரம்ப மலர்கள் இட்டு பூஜித்தும் குழந்தை உண்டாகவில்லை. அதே ஊரில் தனபாலன் என்ற ஒரு வைசியன் குழந்தை இல்லாமல் சந்திர மௌலீச்சுரரையே துதித்தான். ஒருநாள் நவரத்தினங்களால் ஈஸ்வரனைப் பூஜித்தான். பெருமான் அவனுக்குப் புத்திரப்பேறு அளித்தார். அவனும் மகிழ்ச்சியில் குதித்துக் கொண்டே இருந்தான். அதைக்கண்ட சோமசருமன் காரணத்தை அறிந்து பொறாமையும், கோபமும்பட்டு ஈசனை நோக்கி வைசியன் சிறு கல்லால் பூசித்ததற்கு நீ மகிழ்ந்தாய், மனம் பொருந்திய என் மலர்கள் உனக்குப் பிடிக்கவில்லை போலும். இனி நான் பெருங்கல்லால் பூஜிக்கின்றேன் என்று சொல்லிவிட்டு பெருங்கற்களைக்கொண்டு மூர்த்தியை அடித்தான்.

அப்போது பெருமான் அவனுடைய மூர்க்கத்தனத்தைக் கண்டு உனக்கு ஒரு வரம் தருகிறேன். மூந்தி செய்த பூஜைக்காக புத்திரப்பேறு கிடைக்கும். அவனோ சேடன் ஆவான். அவன் பிறக்கும்போது என் தலை வெடித்தாற்போல உன் தலையும் வெடித்துப் போகும் என்று அருளினார். அவ்வாறே குழந்தை பிறந்தவுடன் சோம சருமனுடைய தலை

வெடித்தது. அவன் மனைவியும் இறந்தாள். அனாதையாய்ப் போன குழந்தையை அவன் தாய் மாமன் வளர்த்து வந்தான். அக்குழந்தைக்குத் தருமலன் என்ற பெயர் இடப்பட்டது.

ஒரு நாள் அப்பையன் காட்டிற்குப்போய் சமிதை தேடப்போனான். அங்கே ஒரு நாய் ஒரு சிங்கத்தோடு விளையாடிக் கொண்டிருந்தது. பிறகு அந்த நாய் ஊருக்குத் திரும்பிற்று. ஆச்சரியப்பட்டு அந்நாயைப் பின்தொடர்ந்து சென்றான். அது அரண்மனைக்குச் சென்றது. அந்த நாய்க்கு இரண்டு குட்டிகள் பிறந்தன. அக்குட்டிகளும் எச்சிலைத் தின்று கொண்டு வளர்ந்துவந்தன. ஒருநாள் சக்தி அரசன் தன் உத்தியானவனத்தில் சென்று ஒரு பனைமரத்தைக் குறியிட்டு அடித்தான். அப்பனைமரம் தலைசாய்ந்தது. அதைக்கண்டு ஊரார் புகழ்ந்தார்கள். ஆனால், தருமலன் அதைக் கேலி செய்தான். அதைக் கேட்ட அரசன் கோபித்து அவனுடைய ஆற்றலைக் காட்டும்படி கேட்டான். அவனோ ஒரு வில்லெடுத்து ஒரே பாணத்தால் பல பனைமரங்களை வீழ்த்தினான். அரசன் மகிழ்ந்து உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டான். அவன் இந்த இரண்டு நாய்க்குட்டிகளைத் தர வேண்டும் என்று கேட்டான். அரசனும் மகிழ்ந்து நாய்க்குட்டிகளையும் அன்றிச் சில கிராமங்களையும் கொடுத்தான்.

தருமலன் குட்டிகளை வளர்த்து வந்தான். அவைகளுக்கு ஆடை, சட்டை முதலியவை தைத்தும் அலங்கரித்தான். அதனைக் கண்ட தாய்மாமனுக்கு அவனுடைய ஆசாரத்தைக் கண்டு அவன் மீது கோபம் வந்தது. இப்படி கெட்ட நடத்தைக் கொண்டு இருந்ததால் தன் வீட்டில் இருக்கக் கூடாது என்று துரத்திவிட்டான். தருமலனும் பிராமண வேஷத்தைவிட்டு கீழ்ச் சாதியனைப்போல் திரிந்தான். ஆனாலும் அரசனுடைய நட்பு போகவில்லை. அப்போது சுதாரகன் என்ற பௌத்தன் அங்கு வந்து அவனைக்கண்டு ஆறு மாதத்தில் உனக்கும் அரசனுக்கும் பகை ஏற்பட்டுவிடும் அப்போது எங்கள் ஊர் வைஜயந்திபுரத்திற்கு வந்துவிடு என்று சொல்லிவிட்டுப்

போனான். ஒருநாள் அரசனும் தருமலனும் வேட்டைக்குப் போனார்கள். அங்கே பல விலங்குகளைக் கொன்ற பிறகு, தருமலன் ஒரே வீச்சால் ஒரு சிங்கத்தைக் கொன்றான். ஆனால், அரசன் தான் கொன்றதாக ஊருக்குச் செய்தி அனுப்பி விட்டான். ஊரார்கள் அரசனுடைய சாமர்த்தியத்தை மெச்சி ஊரை அலங்கரித்தார்கள். அரசியும் அரசனை வரவேற்கத் தன்னை அலங்கரித்துக் கொண்டாள்.

மலர்களை விரைவில் கொண்டு வரவில்லை என்று பணிப்பெண்களைக் கோபித்துக் கொண்டாள். அப்போது பணிப்பெண் ஏன் இவ்வளவு தொந்தரவு. எனக்கு எல்லாம் தெரியும். சிங்கத்தைக் கொன்றவன் அரசன் அல்ல, தருமலன்தான் என்றாள். இதை என் கணவனே பார்த்து வந்து சொன்னான் என்று அவள் கூற, அரசி அலங்காரத்தைக் கலைத்துவிட்டு குளிக்கச் சென்றாள். ஊரிலே அரசனை மக்கள் வரவேற்ற பிறகு அரண்மனைக்குச் செல்ல தன் மனைவி எதிர்கொள்ள ஏன் வரவில்லை என்று சிந்தித்தான். பிறகு அரசியைக் கண்டு கேட்க அவள் எவனோ கொன்ற சிங்கத்தைத் தான் கொன்றதாகச் சொல்லுவது சரியா என்று கேட்டாள். அச்சொல்லைக் கேட்ட அரசன் வெட்கமடைந்து தருமலனை அழைத்து ஓ துராத்மனே உன்னை மிகவும் பிரியத்தோடு பாராட்டினேன். இப்போது அரசியோடு சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. இல்லாவிடில் அவளுக்கு எப்படி சிங்கத்தை யார் கொன்றது என்று செய்தி தெரிந்தது. உன்னை நான் கொல்லவில்லை. நீ நாட்டை விட்டு ஓடிப் போ என்று கத்தினான்.

தருமலன் உடனே அவ்வூரை விட்டுப்போய் வைஜயந்திபுரம் சேர்ந்தான். சுதாகரன் அவனைப் பிரியத்துடன் வரவேற்று உபசரித்தான். பிறகு நால்வகைச் சேனைகளை அழைத்துக் கொண்டு சத்திராசனிடம் போருக்குச் சென்று அவன் ஊரை முற்றுகை இட்டான். சத்திராசன் அச்சமுற்று ஆமோத நகரத்துக் காலசேனனுக்குச் செய்தி

அனுப்பி, தனக்கு உதவி செய்யும்படி கோரினான். காலசேனனும் உதவிக்கு வந்தான்.

தருமலன் மேற்கு மலையில் இருந்த பஞ்சபுடன் என்ற பௌத்தனை உதவி கோரினான். வந்த பௌத்தனும் தன் மந்திரத்தால் கால சேனனுடைய ஆயுதங்களை அபகரித்துச் சென்றான். பெரிய யுத்தம் நேரிட்டது. கணக்கற்ற பேர் இறந்தார்கள். அந்த யுத்தத்தில் கால சேனன் இறந்தான். அது கண்டு அவன் மகன் ரூபசேடன் எதிரிகளை வதை செய்தான். ஆனால், தருமலன் சக்தியைக் கொன்றுவிட்டான். பிறகு அவன் மகனுக்குப் பட்டம் சூட்டிவிட்டு வைஜயந்திபுரம் சென்றான். ரூபசேனனோ சிலநாள் பரிட்டாணபுரத்தில் இருந்துவிட்டு ஆமோத நகரம் சென்றான். அங்கே தன் தம்பிமார்களுடன் அரசு செலுத்திவந்தான். அது முதல் காலசேனனின் புத்திரர்கள் கடல்போலப் பெருகினார்கள்.

முதலில் 102 கோத்திரங்கள் ஏற்பட்டன. பிற்பாடு அது 10000 ஆயிற்று. அப்புறம் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் வீடுகளாகப் பெருகின. அவர்களில் நாரதனால் உபதேசிக்கப் -பட்டவர்கள் வைஷ்ணவர் ஆனார்கள். மற்றவர்கள் சுத்தசைவர்கள். இந்த வகையில் தேவாங்க வம்சம் பெருகிற்று. இந்த வரலாறு பிரம்மாண்ட புராணத்தில் உத்தர கண்டத்தில் தேவலமுனி விருத்தாந்தம் என்ற பகுதியில் சூதபுராணிகர் சௌனகாதி முனிவர்களுக்குச் சொன்னதாகக் கண்டிருக்கின்றது.





